
# ஆத்ம ஜோதி



—63இல் நடைபெற இருக்கும் கோணேசப் பெருமானின் கும்பாபிஷேகத்திற்குரிய திருக்கோபுரத்தில் ஒரு காட்சி.

# ஆத்ம ஜோதி

[ ஓர் ஆத்மீக மாதவெளியீடு ]


எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

—சுத்தானந்தர்.


ஜோதி 15 ‖ சுபகிருது ஹூ பங்குனி மீ 1உ (14-3-63) ‖ சுடர் 5


## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தாயினும் நல்ல தலைவர் | 161 |
| 2. | தில்லையில் எம்பெருமான் | 162 |
| 2. | குடமுழுக்கு | 163 |
| 3. | சித்த சோதனை | 168 |
| 4. | போற்றுதே ஆற்றநாள் போக்கினேனே! | 173 |
| 5. | கதிரமலை அல்லது ஏமகூடம் | 177 |
| 6. | சுவாமி சரதானந்தர் | 182 |
| 7. | கடோப நிஷதக் கருத்து | 188 |
| 8. | ஹிந்து மதச் சிறப்புகள் | 192 |
| 9. | எளிதில் சுவர்க்கம் | 1[illegible]6 |
| 10. | உண்மை யறிந்திலர் | 200 |



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள் சந்தா ரூ. 75-00 வருடச் சந்தா ரூ.3—00

தனிப்பிரதி சதம் 30.

கௌரவ ஆசிரியர்:- திரு. க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்:- திரு. நா. முத்தையா

" ஆத்மஜோதி நிலையம் " நாவலப்பிட்டி. [சிலோன்]

தொலைபேசி எண்:- 353.




# தாயினும் நல்ல தலைவர்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
　　தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்தும் மருவிநின் றகலா
　　மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர் பானீக்கி
　　நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
　　கோணமா மலையமர்ந் தாரே.

—சம்பந்தர்.

பொருள்- இறைவன் பால்நினைந்தூட்டும் தாயினும் சிறந்தவன் தாயிற் சிறந்த தயாவானதத்துவன். இந்த உண்மையை அடியவர்கள் தமது சொந்த அனுபவத்திலே அறிந்திருந்தார்கள், தந்தை அன்புக்கும் தாயன்புக்கும் சிறிது வித்தியாசம் உண்டு. தந்தை அன்பு வெளிக்குக் காணமுடியாத சிறு முரட்டுச்சுபாவம் உடையது. தாய் அன்பு அணுபோன்ற உள்ள நெகிழ்ச்சியை மலைபோன்று பெருப்பித்துக் காட்டும் சுபாவம் உடையது. இதனால் தான் எம்பெருமானாரை அவரது அடியார்கள் தாயினும் நல்ல தலைவர் என்று அவரது திருவடிகளைப் புகழுகின்றார்கள். அத்தகைய தொண்டர்களது வாக்கிலும் மனத்திலும் அவர்களது அன்பு கருதி நீங்காமல் இருக்கின்றார். உலகத்திலுள்ள எந்நிலையிலுள்ளாரும் காணத்தக்க பல திருவடிவங்களை உடையவராய் இருக்கின்றார். பிறவி ஒரு நோய். அந்நோய்க்கு இடமானது இந்த உடம்பு. உடம்புக்குக் காரணம் கருமத்தொடர்பு தம்மையே தஞ்சமென்று வந்த அடியார்களுடைய உலகத் துன்பத்தையும் பிறவித் துன்பத்தையும் நீக்குகின்றார். இறைவன், வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன் ஆயினும், வேதங்கள் முழுவதிலுமே நீக்கமறநிறைந்திருப்பவன். இப்படிப்பட்ட இறைவர் எங்கே விசேடமாக இருக்கின்றார் என்றால்? இந்தப் பூமியிலே திருக்கோயிலும் அதனை அடுத்த சுனையும் கடலால் சூழப்பெற்ற திருக்கோணமலையில் அமர்ந்துள்ளார்.

# தில்லையில் எம்பெருமான்

செல்வ நெடுமாடம் சென்று சேண் ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்தும் செல்வஞ் செல்வமே.

-திருஞானசம்பந்தர்

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவையார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழ் ஒளியைத் தேவர்கள்தங் கோனைமற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

-திருநாவுக்கரசர்

பேராது காமத்திற் சென்றுற் போ
லன்றியே பிரியாது உள்கிச்
சீரார்ந்த அன்பராய்ச் சென்றுமுன்
னடி வீழுந் திருவி னுரை
ஓராது தருமனுர் தமர் செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
பேராளர் புலியூர்ச்சிற் றம்பலத்துஎம்
பெருமானைப் பெற்றும் அன்றே.

-சுந்தரர்

பூதங்கள் ஐந்தாகிப் புலனுகிப் பொருளாகிப்
பேதங்க ளனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்கு தில்லை கண்டேனே.

-மணிவாசகர்



# குட முழுக்கு

-(ஆசிரியர்)

கும்பாபிஷேகத்திற்குக் குடமுழுக்கு என்றும் பெயர். கோபுரத்திலுள்ள குடம் போன்ற கலசத்திற்கு மந்திரசக்தி ஏற்றப்பட்ட குடநீரால் முழுக்காட்டுவதைக் குடமுழுக்கு என்று சொல்வர், புதிய கோயில்களில் மூர்த்திகளைப் பிரதிட்டை செய்யும் காலங்களிலும் கோயில்களைப் புனருத்தாரணம் செய்யும் காலங்களிலும், குடமுழுக் காட்டுவார்கள். கோயிலுக்கு மேலும் மேலும் இறையருட் சக்தியைக் கூட்டுவதற்காகப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையும் குடமுழுக்குச் செய்வார்கள்.

கடவுளை லிங்கம் முதலியவற்றிலே வழிபடுவது போலக் கும்பத்திலும் வழிபடலாம். கும்பம் உடம்பின் பாவனை. அதிலே சுற்றிய சீலை தோலாகும்; நூல் நாடிகள்; குடம் தசை; தண்ணீர் இரத்தம்; அதனுள் இடப்படும் இரத்தினம் எலும்பு; தேங்காய் தலை; மாவிலை தலைமயிர்; தர்ப்பை குடும்பி; அதிலே பதிக்கப்பட்ட மந்திரம் உயிர்.

கடவுளை வழிபடுதற்குரிய இடங்கள் மூன்று. அவையாவன; கோயில், சிவஞானிகள், இருதயம். இவற்றுள் சிவஞானிகளுடைய திருமேனியைக் காண்பது மிக அரிது. அதை ஒரு பிறவியிலே ஒரு முறையேனுங் காணமாட்டாமலிருத்தலுமுண்டு. இருதய வழிபாட்டிலே கண்முதலிய பொறிகளேனும் தலைமுதலிய அங்கங்களேனும் தொழிற்பட மாட்டா. இவைகள் சிவத்தொண்டிலே சென்றால் மாத்திரம் தீயவழியில் செல்லாமல் நிற்கும். ஆதலால் மூவகை வழிபாடுகளுள்ளும் எங்களுக்கு மிகப் பொருத்தமானது கோயில் வழிபாடே. மற்றவைகள் இதற்குத்துணையானவை. கோயிலானது பாதகன் முதல் சிவஞானி ஈறாக உள்ளயாவருக்கும் அவசியமானது. ஞானிகளுடைய வருகையினால் கோயில்கள் சக்தியுடையவைகளாகின்றன. ஜீவன் முக்தர்களுக்கும் கோயில் வழிபாடு மிக அவசியம் என்பது ஆகமமுடிபாகும்.

''செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலங்கழீஇ யன்பரொடுமரீஇ
மாலற நேயமலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே''

என்று சிவஞானபோதம் கூறுகின்றது.

அப்பர் சுவாமிகள் போன்ற மெய்ஞ்ஞானிகள் தங்கள் திருச் செயலினாலும் திருவாக்கினாலும் இதனை வற்புறுத்தியருளினர். கோயிலை மறந்தவர்கள் புலையரென்று உமாபதி சிவம் பாடியருளினார்.

இத்தகைய ஆலயங்கள் குடமுழுக்குப் போன்ற உற்சவங்களினால் சக்தி பெறுகின்றன. உத்சவம் என்ற சொல்லுக்குப் பல கருத்துக்கள் உண்டு. உத்-மேலான, சவம்—ஐந்தொழில்; உத்-ஞானம்; சவம்-போகமோட்சம். மேலான ஞானத்தையும் போக மோட்சத்தையும் கொடுப்பதென்பது கருத்து. சிவபெருமான் ஐந்தொழில்களையுஞ் செய்து உயிர்களைக் காக்கும் முறையைத்திருவிழாக்கள் வெளியிடுகின்றன. இவற்றுள் கொடியேற்றம் வரையுள்ள கிரியைகள் படைத்தலையும், வாகனத் திருவிழாக்கள் காத்தலையும், தேர்த்திருவிழா அழித்தலையும், மௌனோற்சவம் மறைத்தலையும், தீர்த்தம் அருளலையும் குறிக்கும்.

மனிதன் ஒவ்வொருவனும் அறிவு, இச்சை, செயல் என்ற மூன்று இயல்புகளையும் உடையவனாய் வாழ்கின்றான். இவை மூன்றும் இல்லாத மனிதன் இலன் என்றே கூறலாம். ஆலயங்கள் அனைவற்றிலும் மனிதனுடைய அறிவு, இச்சை, செயல் மூன்றுக்கும் உணவளிக்கும்படி மூவகை முறைகள் கையாளப்படும். அவை ஆலய அமைப்பு முறை, ஆராதனை முறை, தரிசன முறை என்பனவாம்.

ஆலயக் கட்டடங்கள், அதன் பல அங்கங்கள், மண்டபங்கள், பிரகாரங்கள் முதலியனவும், அங்குள்ள விக்கிரங்கள் அவற்றிற்கேற்பட்ட இடங்கள், யந்திரங்கள், பிரதிஷ்டைகள் முதலியனவும் அமைக்கப்பட்டிருக்கிற விதம் ஆலய அமைப்பு முறையாகும்.

அர்ச்சகர், பட்டர், குருக்கள் முதலியோர் அங்கு பூஜை இயற்றும் முறை ஆராதனை முறையாகும்.



அடியார் சென்று வழிபடும் முறையெல்லாம் தரிசன முறையெனப்படும்.

இந்த மூன்று முறைகளும் தனித்தனியே அறிகுறிப் பொருள், அருள் நெறிப் பொருள், அனுபவப் பொருள் என மூவகைப் பொருள்களைக் கொடுக்கும். அறிகுறிப்பொருள் அடியாருடைய அறிவைப் பெருக்குவது; அருள்நெறிப் பொருள் அடியாருடைய இச்சையைப் பண்படுத்துவது; அனுபவப் பொருள் அடியாருக்கு மன அமைதியையும் சாந்தியையும் ஆன்ம முன்னேற்றத்தையும் அளிப்பது.

அணுமுதல் அண்டம் வரையுள்ள யாவுமே உயிருள்ளன என்பது இந்துமதக் கொள்கை. உயிரானது உலோகங்களில் உறங்குகின்றது; தாவரங்களில் கனவு காண்கின்றது; விலங்குகளில் நனவு காண்கின்றது; மக்கள் தேவரிடத்து அது விழிப்புடன் பகுத்தறிவும் உடையது. முத்தான்மாக்களிடத்தும் இறைவனிடத்தும் அது சத்சித் ஆனந்தமாக இடைவிடாது விளங்கி நிற்கின்றது.

ஒருவன் தன் பூத உடம்பைத்தானாகக் கொண்டு அதுவே தானாக உணர்ந்து ஒழுகும் போது, அவன் பூதான்மா அல்லது தேகான்மா எனப்படுவன். பரா, பச்யந்தி, மத்யமா, வைகரீ என்னும் நால்வகை வாக்கை, அதாவது அவற்றிற்கு ஆதாரமானதன் இச்சைகளையும் விருப்பு வெறுப்புக்களையும் தானாக ஒருவன் கொள்ளும் போது அவன் அந்தரான்மா ஆவன், பிருதுவி முதல் புருட தத்துவம் வரையுள்ள ஆன்ம தத்துவங்களை, அதாவது அவற்றை அழியுங் கருவியாகிய மனத்தையே தானாக ஒருவன் உணரும்போது அவன் தத்துவான்மா எனப்படுவன், மேற்சொன்ன யாவற்றையும் நான் அடக்கியாளக் கூடியவன் என்ற உணர்வு ஒருவனுக்குப் பிறந்து, அதனால் "நான் பிரம்மம்'' என்ற ஆணவ முனைப்பு ஏற்படும்போது அவன் முக்குணவசப்பட்ட ஜீவான்மா ஆவன்; பின்னர் அவன் யான் எனதென்ற பசு நிலையை நீக்கவும் பேரின்ப வீட்டைப் பெறவும் விரும்பி மந்திரோபாசனையில் ஒன்றி நிற்கும்போது மந்திரான்மா எனப்படுவன். முடிவில் அவன், இறைவனோடு உடனாய், இரண்டறக் கலந்து நிற்கும் நிலையில் பரமான்மா ஆவன். ஒரே ஆன்மாவே அதன் அறிவு நிலையைப் பொறுத்தும் அது சார்ந்து நிற்கும் பொருளைப் பொறுத்தும் பூதான்மா, அந்தரான்மா, தத்துவான்மா, சீவான்மா, மந்திரான்மா, பரமான்மா என ஆறு பேதங்க

ளாக விளங்கும் என்பது ஆகமக் கருத்து. ஆன்மாவின் இந்த ஆறு நிலைகளையும் அறிகுறியாக உணர்த்துவதே சிவாலயங்களிலுள்ள,

| | | |
|---|---|---|
| முன்கோபுரம் | — | பூதான்மா |
| மகாபலிபீடம் | — | அந்தரான்மா |
| கொடிமரம் | — | தத்துவான்மா |
| மூலவர் | — | சீவான்மா |
| ஆசாரியார் | — | மந்திரான்மா |
| பரவெளி | — | பரமான்மா |

என்பனவாம். தைத்திரீய உபநிஷத்தில் இவற்றை அன்னமய ஆத்மா, பிராணமய ஆத்மா, மனோமய ஆத்மா, விஞ்ஞான மய ஆத்மா, ஆனந்தமய ஆத்மா, பிரத்தியக் ஆத்மா என்பர்.

ஆலயம் செல்வோர் வெகு தொலைவில் வரும்போதே முதன் முதல் காண்பது கோவிலின் உயர்ந்த கோபுரம்; கண்டதும் உடனே அதனை வணங்குவர். ஆலயத்துள்ள இறை உருவங்களுக்கு அடியில் யந்திர ஸ்தாபனம் செய்யப்பட்டிருப்பதாலும், ஆலயக் கோபுரங்கள் கும்பாபிஷேகம் செய்யப்பட்டிருப்பதாலும் அவற்றை மாத்திரம்மக்கள் ஆண்டவன் சானித்திய சின்னங்களாகவும் அருட்கருவிகளாகவும் அறிந்து எங்கும் வணங்குவர். யந்திரப் பிரதிஷ்டை இல்லாத விக்கிரகம், எஞ்சின் இல்லாத மோட்டார் வண்டி போன்றது.

''மனிதன் உடம்பல்ல, ஆன்மா'' என்ற உண்மையை இடைவிடாது நமக்கு ஞாபகமூட்டி நிற்பதே ஆலயத்தின் முன் கோபுரமும் உள்ளிருக்கும் மூலஸ்தான மூர்த்தியும் அறிகுறியாகச் செய்து வரும் முதல் வேலை. அதனால் அடியார் ஒவ்வொருவரும் ஆலயமதிலையும் கோபுரத்தையும் புறத்தே கண்டவுடனே ''நான் இந்த உடம்பல்ல, உள்ளிருக்கும் ஆன்மா'' என்ற உண்மையை அறிவுறுத்திக் கொள்ளுதல் வேண்டும். பிறரைக் காணும்போது, அவர்களையும் உடம்பாகக் கருதாது ஆன்மாவாகக் காணும் தன்மையை வளர்த்துக் கொண்டு வருதல் வேண்டும். அப்போது அது பிற உயிர்களிடம் அன்பைப் பெருக்கித் தனக்கு உயர்ந்த மனநிம்மதியைக் கொடுப்பதற்குரிய ஓர் உத்தம ஆத்மசாதனமான அனுபவத்தில் காணப்படும்.



இலங்கையிலுள்ள புண்ணிய ஸ்தலங்களுள் கோணேஸ்வரமும் ஒன்று. இது தேவார ஆசிரியர்களால் பாடல்பெற்ற ஸ்தலங்களுள் முக்கியமானது. போர்த்துக்கீயருடைய ஆட்சியிலே கோபுரம் தரைமட்டமாக்கப்பெற்றது. கடந்த சில ஆண்டுகள் வரை கோபுரமும் திரு உருவங்களுமில்லாத வழிபாடு நடைபெற்று வந்தது. மக்களுடைய வழிபாட்டுக்கிரங்கிய பெருமானார் மறைந்திருந்த திருவுருவங்களை வெளிக் கொணர்ந்தார். முன்பு கோயில் இருந்ததாக மதிக்கப்படும் அதேஇடத்திலேயேகோணேஸ்வரப்பெருமானுக்குக்கோயில் ஒன்று எழுப்பினார்கள். 3—4—63 இல் மிகக் கோலாகலமாகக் குடமுழுக்காட்டு நடைபெற இருக்கிறது. அன்பர்கள் பங்கு பற்றிப் பயனடைவார்களாக.

## கடவுள்

எவரும் கடவுளை எந்தக் காலத்திலும் கண்டதில்லை. அன்பு செய்பவரிடம் அவர் வசிக்கின்றார்.

கடவுளை நேசிப்பதாகக் கூறிக்கொண்டு சகோதரனைத் துவேஷிப்பவன் பொய்யன், கடவுளை நேசிப்பவன் சகோதரனையும் நேசிக்கவே செய்வான்.

கடவுளிலேயே நாம் வாழ்கிறோம். அவரே நம் உயிர். அவருடைய குழந்தைகள் நாம்.

கடவுள் அன்பாக உளர். அன்புடன் வாழ்பவன் கடவுளிடம் வாழ்பவன். கடவுள் அவனிடம் வாழ்வார்.

அன்பு செய்யாதவன் கடவுளை அறியான், அன்பே கடவுள் ஆதலின்.

மனிதன் உணவினால் மட்டுமே வாழ்பவனல்லன். அவனுக்கு வாழ்வு தருவது கடவுள் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லுமாகும்.

— யேசுக்கிறிஸ்துநாதர்.

# சித்த சோதனை

*[முன் தொடர் 3.]*

— சுவாமி கெங்காதரானந்தா —

ஆத்ம சகோதர! நீ துறவறத்துக்கு விருப்பங்கொண்டிருப்பது நன்று நன்று. பூர்வ ஜென்ம புண்ணியப் பயனே இத்தகைய ஆர்வத்திற்குத் தூண்டுதலாயிருக்கின்றது. முன்னைய நல்வினையும் தற்பொழுதிருக்கும் இச்சையும் முயற்சியும் ஒன்று சேர்ந்து செயல்ப்படுங்கால் துறவறம் பூண்பது சாத்தியமேயாகும். எனினும் ஆத்மீகத்துறையின் இளம் பிராயம் துறவைப்பற்றிய உண்மைகள் சிலவற்றைத் தெளிவாய் அறிந்திருப்பது, முயற்சிக்கு அனுகூலமாயிருக்கும், துறவு சன்னியாசம் முதலிய வார்த்தைகள் சற்றேறக் குறைய ஒரே கருத்தை விளக்குபவை. துறவென்பது, சில சின்னங்களை அணிவதினாலோ அன்றி விருதுகள் சிலவற்றைப் பெறுவதினாலோ கிடைக்கக் கூடியதன்று. நாமங்களை மாற்றி அமைப்பதினாலும் அது கைகூடுவதில்லை. ஈஸ்வர சிருஷ்டிகளை வெறுத்து ஒதுக்கிப் புறந்தள்ளிவிட்டு வாழ்வதும் துறவற வாழ்வன்று இவைகளெல்லாம் வாழ்க்கையின் சில இலட்சியங்களையும் விருப்பங்களையும் மாற்றி அமைத்தற்குரிய அறிகுறிகளும் வேஷங்களுமேயாகும். உண்மைச் சன்னியாசம் அல்லது துறவு அது வன்று. உயர்ந்த மனோபரிபாகத்தாலடையும் பற்றற்ற நிலையே துறவு. இன்னும் சிறிது விரித்துக் கூறுவதென்றால் நான் எனது என்ற தன் முனைப்பும் ஜீவபோதமும் அற்ற இடமே துறவு. சமரசானுபூதியே துறவின் அருள் விளக்கம். நான் என்ற தடிப்பு சிறிதளவேனும் இருக்கும் வரையிலும் துறவின் அனுபூதி அணுவளவும் உண்டாவதற்கில்லை. சிற்றுணர்ச்சிகளைப் பதப்படுத்துவதே தவம். ஆகையால் உண்மையான சந்நியாசம் ஒருவனால் அளிக்கக் கூடியதன்று. ஆத்மப்பயிற்சியாலும் திருவருளாலும் பரிபக்குவமடையுங்கால் அனுபூதி மாத்திரமாய் நிற்கும் ஒரு தனித்த நிலையே துறவு. என் சகோதரா, கனவிலும் நினைவிலும் குறியின் கண் ஆர்வக் கனலை எழுப்பு. மெல்ல மெல்ல நிதான புத்தியுடன் சாதனையைத் தீவிரப்படுத்து. தற்கால ஆத்மீகத்துறையில் அதி சூக்குமமாய் செயல்ப்பட்டு வரும் வஞ்சனை, பொய், பித்தலாட்டங்களில் அகப்பட்டு வீழ்ச்சியடையாமல் இருக்க ஆத்மானந்த சொரூபியாகிய பரம் பொருள் எக்காலமும் உன்னைக்காத்து இரட்சிப்பதாக. அவனருள் என்றும் உன்னில் நிலைப்பதாக. சமர



சானுபூதியை மறைக்கும் சம்சார பந்தங்களினின்று சிறிது சிறிதாக விடுதலையடைவாய். தீவிரமாய் முயற்சிசெய். காரியம் கை கூடும் வரையிலும் ஓய்ந்திராதே. சம்சார பந்தங்களினின்று விமுக்தனாகியவனே துறவி. மனதின் ஆசா பாசங்களே சம்சாரம். அதைத் துறப்பதே துறவு. வியக்தி மனம் தனது பரிணாம வளர்ச்சியினிடையில் அனுபவித்த விஷயாதிகளின் பதிவுகளே பூர்வ வாசனையாகும். அத்தகைய வாசனைகளின் விளைவுகளே பிராரப்தம். சகலத்தையும் வெறுத்துத் தள்ளி வரட்சியான மனதுடன் வாழ்வதே துறவென்று அநேகம் பேர்களும் கருதுகின்றனர். இவ்வுலகிற் காண்பதெல்லாம் திருவருட் சக்தியின் மகிமையால் தோன்றியவை. திருவருட் கடாட்சம் பெற்றவைகளை வெறுப்பதென்றால் ஈஸ்வர சக்தியை மறுப்பதற்கொப்பாகும். எனினும் அதில் கட்டுண்டு கிடக்காமல் சேர்ந்து வாழப் பழகுதல் வேண்டும். **அதுவே,** பற்றாமல் பற்றிய வாழ்வு.

சிலதில் விருப்பும் மற்றும் சிலதில் வெறுப்பும் இல்லாமல் சம சிருஷ்டி பாவனையுடன் தனக்குற்றபணியை செய்து கிடப்பதே துறவியின் பூதவுடல் வாழ்க்கையாயிருத்தல் வேண்டும். எதையும் வெறுக்காமலென்றால் நஞ்சையும் ஏற்கலாமென்று பொருள் கொள்ளலாகாது. தனது இலட்சிய வாழ்வுக்கு அனுகூலமானதையும் அவசியமானதையும்மாத்திரம் பெற்று மற்றவைகளிடத்தில் சாதக பாதகமில்லாமல் அலட்சியமாய் இருப்பதே வெறுப்பில்லாமல் இருப்பதென்பதன் கருத்து. ஒவ்வொன்றும் அதனதன் ஸ்தானத்தில் உபயோகமுள்ளதும் சிறப்புடையதுமாக இருக்கின்றன. இவ்வுலகில் நிரந்தரமான பழமையும் புதுமையும் இல்லை என்பதை உனக்கு ஞாபக மூட்ட விரும்புகின்றேன். பழமை புதுமையாகவும், புதுமை பழமையாகவும் மாறி மாறி வடிவெடுக்கின்றன. இங்ஙனமே நஞ்சென்றும் அமுதமென்றும் தனித்தன்மை வாய்ந்த பொருளும் இவ்வுலகில்லை. ஒன்றுக்கு நஞ்சாயிருப்பது பிறிதொன்றுக்கு அமுதமாயிருப்பதை நீ அறியவில்லையா? மனிதர்களின் உயிரை மாய்க்கும் சில நஞ்சுகள் மற்றும் சில உயிர்களுக்கு போஷகப் பொருளாயிருப்பதையும் நீ நேரிலே அறிந்திருக்கக் கூடும். இவ்விதம் ஒரு பகுதிக்கு நலம் தருவன மற்றும் சிலவற்றிற்குத் துன்பம் விளைவிப்பனவாயிருக்கின்றன. ஒரு காலத்தில் சுகந்தருபவை மற்றொரு காலத்தில் துக்கமாகவும் அதே துக்கம் இன்னொரு சுகத்திற்குக் காரணமாகமிருக்கின்றது. எண்ணிப்பார்த்தால் எதுவுமே நிலையான தனித்தன்மை வாய்ந்ததாக இல்லை. அப்பனே! இவ்வுலகமே ஒரு விசித்

திரமானது எனினும் பிரபஞ்ச நிகழ்ச்சிகள் யாவும் ஒரேயொரு சர்வக்ஞனின் ஆணைக்கும் அனுசரணைக்கும் உட்பட்டு நியதியை மீறாமல் நிகழ்வதேயாகும். வெளிப்பார்வைக்கு ஒன்றோடொன்று பொருத்தமில்லாது அன்னியோன்னிய விரோதமாயும் தோற்றப்படும் உலகப் பொருள்கள் யாவும் தன் ஒளியும் சக்தியும் மிக்க ஒரு அமுத கலையாய் தொகுத்து இணைக்கப்பட்டிருக்கின்றன. பிரபஞ்ச நிகழ்ச்சிகள் அத்துமீறிச் செல்லாமல் ஒரு நியதிக்குட்பட்டு ஒழுங்காய் இயங்குவதற்கு அனைத்திலும் ஊடுருவி நிற்கும் அந்த அமுத சக்தியே காரணமாயிருக்கின்றது. மெல்லிய தங்கக் கம்பிபோல் எல்லாத்திற்குள்ளும் ஊர்ந்து நின்று தன்பால் அனைத்தையும் தொகுத்து வைத்திருக்கின்றது. என்னையும் உன்னையும் ஏன் மற்றெல்லாச் சராசரங்களையும் ஒருமைப்படுத்தி ஒன்றித்து நிறுத்துகின்றன. ஒவ்வொன்றுக்கும் அந்தரங்கமாய் இருக்கும் இணக்கத்திற்கும் விருப்புக்கும் இந்த அருட்சக்தியே நிமித்த காரணமாயிருக்கின்றது. உன்னிலும் என்னிலும் இருக்கும் வெப்பமும் குளிரும் ஒளியும் அதன்பால் வருவது. அந்த சக்தியால் அண்டங்களுக்கு பிரகாசமும் வலிமையும் இயக்க சக்தியும் தொடர்பு கொள்ளும் ஆகர்ஷண சக்தியும் அந்த அமுத கலையின் தொடர்பால் உண்டானவை. ஒவ்வொன்றும் தன் நிலை தவறி விழாமல் இருப்பதற்கு இதுவே காரணம்.

பாரமார்த்திகத்தில் நாம் அனைவரும் அந்த ஜீவாமிர்தக் கம்பியாம் அருட் சக்தியில் தொடுக்கப்பட்ட பலவித மணிகளேயாகும். எப்பொழுது அந்தஜீவார்மிதக்கலை தனது சொந்த ஸ்தானத்தில் திரும்பவும் லயப்பட்டு ஒடுங்குகிறதோ அப்பொழுது அண்டசராசரங்களும் தனதுஜீவசத்தை இழந்து தூளி தூளியாகப் பஸ்மீகரமாகும். போதிய பரிபாக மடைந்து உன்னை நீயே அறியுங்கால் எல்லாவற்றையும் இணைத்து நிறுத்தி உயிர்ப்பிக்கும் அந்த ஜீவசக்தி ஊறிவரும் ஒரு ஆதாரப் பொருள்; அருள் கனல் கக்கும் ஒரு மகா சைதன்யத்தின் ஓர் அம்சம்; உன்னில் உறைந்திருப்பதை நீ உணர்வாய். நீ எதைப் பார்த்துத் தியான ஜெபங்கள் செய்து வருகின்றாயோ அந்த லட்சியப் பொருளே அது. பூத உடலையும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் சேர்ந்த அந்தக் கரணம் என்ற சூக்கும சரீரத்தையுங் கடந்து உச்சியில் இருக்கும் காரண சரீரமாகிய பிரம்ம சரீரத்தை அடையுங்கால், இதன் இரகசியமெல்லாம் விளக்கமுறும். காரண சரீரத்தை அடைந்தவன் ஜனன மரணங்களைப் பற்றிய மர்மத்தை உள்ளபடி விளங்கிக் கொள்கிறான். அது விளங்கினவன் யாண்டும் துறவியே யாகும். மூப்பும் பிணியும், விருப்பும் வெறுப்பும், பிறப்பும் இறப்பும் யாருக்குத்தான்? அன்றும் இன்றும் இனி என்றும் உள்ளவாறே இருக்கின்றாய். பரமார்த்தீக நிலையில் துறக்க வேண்டுமென்ற விருப்பமும் கூட ஒரு பிரமையே யாகும். எனது கூற்று அளவுமீறி விட்டதே என்று நினையாதே. இதையிட்டு அதிர்ச்சியும் அவிஸ்வாசமும் கொள்ளாதே. ஒரு பேருண்மையைக் கூறினாலும் கூறாவிட்டாலும் என்றும் உள்ளது உள்ளபடியே இருக்கும். மாற்றங்களெல்லாம் உனது அந்தக் கரணத்திற்கும் அதைத்தாங்கி வரும் பூத உடலுக்குமே தவிர ஆத்மாவுக்கு இல்லையென்பதை உறுதியாய் விஸ்வாசிப்பாயாக. இறப்பும் பிறப்பும் அந்தக் கரண சேஷ்டைகளேயாகும். கொல்லன் முரட்டுத்தனமான இரும்பை உலையில் வைத்துக் காய்ச்சிப் பக்குவப் படுத்தித் தனது இச்சைப்படி வேண்டிய பொருளாக மாற்றுவது போல் ஆத்ம சாதனங்களால் அந்தக் கரணங்களை நன்றாய்ச் செப்பனிட்டுப் பதப்படுத்தித் தன்வயப்படுத்தி வைத்தால் அதை விரும்பியவாறு கையாளலாம். அந்தக் கரணத் தாக்க மில்லாமல் வேறாக உன்னில் தனித்து பிரிந்து நிற்பதேதோ அதுவே **உண்மையான நீ**. அதுவே உனது தனித்த நிலை. உனது சொரூபமும் அதுவே.



அந்தக் கரணத்தைத் தன் கைப் பொம்மையாக வைத்திருப்பவர்களுக்கு இவ்வுலக வாழ்வு தாமரை இலையும் நீரும் போல் பற்றிப் பற்றற்று நிற்கும். எனினும் அந்நிலை அடைந்த பின்பும் உதயாஸ்தமனம் போல் தோன்றியும் மறைந்தும் நிற்பதே தவிர இடையறாமல் பிரகாசித்திருக்குமென்பதை நாம் கருதவில்லை. ஞான தாகத்தாலும் நித்தியா நித்திய விசாரணையாலும் உள்ளது ஒன்றே என்ற எண்ணத்தைத் திரும்பத் திரும்ப உறுதிப் படுத்துக.

அன்புக்குரியவனே! உன்னைச் சேவிக்க வந்தவர்களெல்லாம் உண்மையில் சேவிப்பது உன்னையன்று. உலக வழமைக் கேற்ப நீ பெற்றிருக்கும் சில உலகப் பேறுகளை மொய்க்க வந்த ஈய்க்களும் கிருமிகளுமேயாகும். அதாவது பருவ காலத்தில் உன்னிலூறும் பலரசக் களியை உறிஞ்சியுண்டு முடிந்தபின் புது விருட்சங்களை நாடித் திரியும் பறவைகள். உனது தேக சம்பத்துக்கள் யாவும் குன்றியதும் உன்னை எது என்று திரும்பிப் பார்ப்பவர்கள் யாருமிலர்.

எனினும் உனது உதவியையும் சகாயத்தையும் நாடி நிற்பவர்களுக்கு இயன்றதை உள்ள நிறைவுடன் செய். அவற்றுடன் பழகும் பொழுது ஊனும் ரத்தமுங் கலந்த அவற்றின் தேக விகாரத்திற்குப் பலியாகாமல் எட்டி நின்று பணிசெய். உன்னில் உறையும் அதே சைதன்னியமே அவர்களுள்ளும் உறைந்திருக்கின்றது. அங்ஙன மிருந்தும் தன்னுள் மறைந்து இருக்கும் ஆத்மப் பிரபையை ஒருவன் தன்னுள் காணாத காலம் வரையிலும் பிறரிடத்தில் அதைக் காண்பதும் பிறவுயிர்களைத் தெய்வமாகக் கருதி வழிபடுவதும் அசாத்தியமானதேயாகும்.

நீர் மூழ்கியைப் போல் உனதுள்ளே ஆழ்ந்து ஆழ்ந்து மூழ்கிச் செல். முக்கோண வடிவில் துயில் கொள்ளும் வரியைத் தியான வலிமையால் தட்டி எழுப்பி உச்சிக் குகையில் ஏற்றி நிறுத்து. அளவிட்டுரைக்க முடியாத அதன் சக்திக் கனல் அந்தக் கரண மலங்களை எரித்துச் சாம்பலாக்கி உன்னை நித்திய சுத்த சுதந்திரனாக்கும்.

(தொடரும்)

## கோயில்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணி விளக்கே.

— திருமூலர்

## கடவுள்

உண்டாலும் பருகினாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் இறைவனுக்குப் புகழுண்டாகுமாறு செய்க.

— யேசுக்கிறிஸ்துநாதர்



# போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே!

— திரு. செ. தனபாலசிங்கன் B. A. [Lond,] —

‘‘ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ’’ என்பது தித்திக்கும் திருவாசகம். அன்பின் வேகத்தினால் பக்திபழுத்த மனம் இறைவனை வெவ்வேறு பெயரிட்டு வாழ்த்துகின்றது. எந்தப் பெயர் எந்த உருவம் பக்தனுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிறதோ அதை வைத்துப்பாடுகிறான், வழிபடுகிறான். ‘ஏகம் சத்விப்ரா பகுதா வதந்தி’ மெய்ப்பொருள் ஒன்றினை மெய்ஞ்ஞானிகள் பலபெயரிட்டு அழைக்கின்றார்கள். எப்பெயரையும் தன்பெயரெனக் கொண்டு எவ்வடிவையும் தன்வடிவமாக ஏற்றருளி வருவான் எம்பிரான். ‘‘எது பாவித்திடினும் அதுவாக வந்தருள் எந்தை’’ என்கின்றார் தாயுமான சுவாமிகள். தேவர் கோ அறியாத தேவதேவனை வானோர்கள் பேர் ஆயிரம் சொல்லி ஏத்துகின்றார்கள்.

நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்ட இறைவன் பிரிவிலா அடியார்க்கு என்றும் வாராத செல்வம் வருவிப்பான். செல்வம் அருட்செல்வம், பொருட்செல்வம் என இருவகைத்தாகும். பொருளைக் கொடுத்து அருளைப்பெற வேண்டும். இறைவன் பொருளைக் கொடுத்திருக்கிறான், அருளைக் கொடுப்பதற்காக என்பதை நாம் மறந்துவிடுகிறோம். இந்த இரகசியம் பலருக்குத் தெரியாது. தெரிந்தவர்கள் ‘‘பொங்கார வேலையில் வேலை விட்டோன் அருள்போல் உதவ எங்காயினும் வரும்’’ என்று அருணகிரிநாதர் காட்டும் வழியில் நடப்பவர்கள். பொருள் வழங்கி அருளைப்பெறத் தெரியாதவர்களுக்கும் இறைவன் ஓரிடம் தேடிக்கொடுக்கிறான். அது தான் கடுநரகம். பாடுகிறார் அப்பர் சுவாமிகள்.

‘‘இரப்பவர்க்கீய வைத்தார் ஈபவர்க்கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகம் வைத்தார்
பரப்பு நீர்க் கங்கை தன்னைப்படர்சடைப் பாகம் வைத்தார்
அரக்கனுக்கு அருளும் வைத்தார் ஐயன்ஐ யாறனாரே’’

பொருட்செல்வம் தக்க வழியில் செலவு செய்யப்பட்டால் அருட்செல்வத்தை வாரி வழங்குவான் என்பது சிந்தனைக்கோர் சீரிய விருந்து. வாராத செல்வம் திருவருட்செல்வம்.

தொல்காப்பியம் பேசுகிறது.

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழிதானே மந்திரம் என்ப''

''கடவுளை நோக்கி அழைத்தல், புகழுதல், வேண்டல், ஏவுதல், ஆராய்தல், வினவல், விடுத்தல், புலம்பல் முதலிய செயல்களைத் தனித்தனியே உடையனவாய் அறிவு செயல்களை நினைப்பனவாய், பத்தி சுத்தி சித்திகளைப் பயப்பனவாயுள்ள வாசகங்கள்'' மந்திரங்கள் ஆகும் என்கிறது. சைவப் பிகாசனம். புகழ்நூல், பொருள் நூல்கள் அனைத்தும் மந்திரமே. இவையெல்லாம் திருவருள் வண்ணமாய்த் திகழ்ந்த நிறைமொழி மாந்தராம் நாயன்மார்களினால் அருளிச்செய்யப்பட்டன. மந்திரங்கள் ஆகிவிடுகிறான் இறைவன்! ''பிரத்தியட்ச அனுமான ஆகமா பிரமாணானி'' என்பது பதஞ்சலி யோக சூத்திரம். ஆகமம் ஆப்த வாக்கியமாகிய தந்திரம். தந்திரமும் ஆகிவிடுகிறான், அப்பரம்பொருள்! அம்மட்டுமல்ல, அவன் தீராதநோய்களையெல்லாம் தீர்த்தருளும் வைத்தியன். அவனுடைய மூலிகை மர்மம் எனக்குத் தெரியாது. அவன் வைத்தியர்களுக்கெல்லாம் வைத்தியன். ''மண்டலத்தில் நாளும் வைத்தியராய்த்தாமிருந்துகண்டவினை தீர்க்கின்றார்'' என்று காளமேகம் சும்மாவா பாடினார்? நாம் குறிப்பிடும் வைத்தியநாதன் உடல்நோய் போக்கி, உள்நோய் நீக்கி, பிறவிப்பிணியையேபோக்கி விடுவான்! அவன் பிறவி அறுக்கும் பிரான். இதைத் தெரியாமலா வான்புகழ் வள்ளுவர் ''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடிசேராதார்'' என்று இரண்டு வரிகளிலேயே பொறித்து விட்டார். மலநோய் தீர்த்து வழிப்படுத்தி மாண்பார் மலரடிகொடுத்து இன்புறுத்தும் மருத்துவன் அவன் ஒருவனே.

நமக்கு வீரம் வேண்டும். பிறர் நலத்தில் கைவையாத ஒரு வீரம் இருக்க வேண்டும். இன்னும் விளக்கமாகச் சொன்னால், தன்னலத்துக்கு வேலி போட்டு பிறர் நலத்தில் கை போடாது வாழ்கின்ற வீரவாழ்க்கை நமக்கு வேண்டும்!



''ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணி அல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ.''

என்று வீரவாழ்க்கையைச் சுட்டிக்காட்டுகின்றார் சேக்கிழார். அந்த வீரவாழ்க்கை வேண்டுமாக இருந்தால் திரிபுரங்களை நெருப்பினால் வெந்து அழிய வில்லைக் கையிற்கொண்ட போர்த்தொழில் வல்லபிரானின் திருவருட்செல்வம் வேண்டும்.

''நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடி
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தா னாயிடினும்
கொன்றான் காண் புரமூன்றுங் கூட்டோடேசாழேலோ.''

சனகர், சனாதனர், சனற்குமாரர், சனந்தனர் ஆகிய நால்வர்க்கும் கல்லால விருட்சத்தின் கீழிருந்து ஞான மூர்த்தியாகி அறக்கருணைபாலித்த பெருமான், மலையை வில்லாக வளைத்து முப்புரங்களையும் தகனஞ் செய்தமை மறக்கருணை பாலித்தல் ஆகும்.

அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை

என்பது வள்ளுவர் வேதம்.

முப்புரமெரித்தல் மும்மலங்களைதலாகும்.

''அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனர் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மலகாரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரே''

எனத் திருமூலர் எங்களைச் சீரிய சிந்தனையிலாழ்த்தி விடுகிறார். முன்னைப் பழம் பொருட்கு முன்னைப்பழம் பொருளாகிய முதல்வன் ஆருயிர்கள் உய்தல் வேண்டி அவ்வுயிர்களைச் சார்ந்த மும்மல காரியங்களைச் செய்து அருளுகின்றான். முப்புரம் மூன்று கோட்டை. இவற்றின் நடுவில் இருப்பது உயிர். இது அன்பு, அறிவு, ஆற்றல் என்னும் மூன்று பண்புகளோடு

கூடியது. மூன்று கோட்டைகளும் இரும்பு வெள்ளி பொன்னாலானவை. இரும்பு ஆணவத்தையும், வெள்ளி மாயையும், பொன் வினையின் காரியத்தையும் குறிப்பன. இதனாலன்றோ திருமூலர் முப்புரமாவது மும்மல காரியம் என அழுத்தம் திருத்தமாகச் சொல்கின்றார். ஆழ்ந்த கருத்துக்களையறியாது புராணங்களை அலசிப்பார்க்கின்றவர்களுக்குதிருமூலர் போன்றாரின் பொன்மொழிகள் நல்விருந்தாகட்டும்.

இத்தகைய சீரும் திருவும் பொலியும் சிவலோக நாயகன் வீற்றிருந்தருளும் இடங்களுள் ஒன்று திருப்புள்ளிருக்கும் வேளூர். புள்ளிருக்கும் வேளூர் என்பது வைத்தீஸ்வரன் கோயில். இங்கேயும் ஒரு முருகன் இருக்கிறான். அவன் செல்வ முத்துக்குமாரன். வள்ளிக்குறத்திக்கு வாய்த்த மாப்பிள்ளை. இந்த முத்துக்குமாரன் மேல் தமிழ் கொஞ்சி விளையாடும் ஒரு பிள்ளைத்தமிழ் பாடியிருக்கிறார் குமரகுருபரசுவாமிகள். அந்தத் திருமுருகன் ''விழியாக முன்னின்று தண்ணளிசுரந்து வேண்டிய வரங்கொடுப்பான். மெய்கண்ட தெய்வம் இத்தெய்வம் அல்லால் புவியில் வேறில்லை'' என்று பாடிப் பரவுகிறார் அந்த அருளாளர். புள்ளிருக்கும் வேளூரில் எம்பிரான், செங்கனிவாய்த்தையல்நாயகியுடனும், செங்கோட்டுப்பிள்ளை சிவந்த பிள்ளையாம் முத்துகுமாரனுடனும் எழுந்தருளியிருக்கிறான். வணங்கித் துதிக்காமல் வாழ்நாளைப் போக்கி விட்டேன் என்று வருந்துகிறார் அநுபூதிச் செல்வர் அப்பர். போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே என்கின்றார் அவனைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளென்பது அவருக்குத்தெரியும். நமக்குத் தெரியாது! அவர் பாடிய திருத்தாண்டகத்தை நாமும் பாடுவோம்!

''பேராயிரம் பரவி வானோர் ஏத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க்கு என்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்
தீரா நோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைக்கைக்கொண்ட
பேரரானைப் புள்ளிருக்கும் வேளூரானைப்
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே.



# கதிரமலை அல்லது ஏமகூடம்

[பண்டிதர். செ. பூபாலபிள்ளை அவர்கள்]

''கதிரை மலைத்தீபங் கண்டு தொழுதால்
அதிரவருந் தீவினை அல்லல் — எதிராது
வேலன் அருளுண்டு வேறுகுறை ஏதுமில்லைக்
காலனுறான் வீடுறுவை காண்.''

1. கதிரமலை;— கதிர்காமத்துள்ள ஏழு மலைகளுள்ளுங் கதிரமலை சாலச் சிறந்ததொன்று. இது சுவாமி மலையெனவும், திருமலையெனவும் ஏமகூடம் எனவும், தென்கயிலையெனவும், உச்சிமலை எனவும், வெடசித்தி கந்த எனவும், பளவினி சிங்காசன கந்த எனவும் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. இந்தமலை உரிமை தெய்வயானையம்மன் கோவில் வாவாக்களுக் குரியதொன்று. ஈழநாட்டிற் கண்டவர்க்கு நன்மை தருங் கந்தப் பெருமான் முதன்முதல்-இந்தத் திருமலையில் வந்திறங்கினார் என்று இங்குள்ள மக்கள் கூறுகின்றனர். கதிர்காமத்திலே முதலில் இந்தத் திருமலை வேலுக்குப் பூசை நடைபெறுகிறது. முற்காலத்திலே கலியாண மண்டபத்தில் வீற்றிருக்கும் வாவா ஒருவரே கதிரமலைக்கும், செல்வக் கதிர்காமத்துக்கும், கொங்கட்டி மடத்துக்கும், கதிர்காம வடிவேலவர் கோவிலுக்கும், தெய்வநாயகி ஆலயத்திற்கும், வள்ளிநாயகி கோவிலுக்கும், நாளாந்தம் நடந்துபோய்ப் பூசை நடாத்தி வந்தனர். இப்பொழுது பல அர்ச்சகர்கள் உரிமை பாராட்டிப் பூசை புரிந்து வருகின்றனர். அக் காலத்திற் காட்டு மத்தியில் இக் கோவில்கள் அமைந்திருந்தன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு ஆதியாம்பகுதிகளில்இருந்துமுருகன் அடியார்பாதசாரிகளாக சந்நிதிக்கு பக்தியுடன் யாத்திரைசெய்தனர். மட்டக்களப்பாரும் கொழும்பாரும் தனித்தனி ஒரு தங்கவேல் தாங்கிப் பெருங் கூட்டமாகச் சென்று சந்நிதிக்குக் கொடுத்துத் தமக்குரிய திருவிழாக்களையுஞ் செய்து உவந்தனர். அக்காலங் கதிரைக்குச் செல்லுங் காட்டுவழி யாத்திரை

''கல்லுறுத்துங் காட்டெருமை கத்துங் கரிபிளிறும்
செல்லும் வழியிற் கரடிபுலி — இல்லில்லை
வெய்யில் புழுதிமழை மேவினால் வேல்காக்கும்
அய்யமிலை முத்தி அறி''

என்றபடி மிகக் கடினமான தொன்றாக இருந்தது. இன்று கதிர்காம ஆலயங்கள் பட்டினக் கோவில்களாக மாறி வருகின்றன. இயற்

கை அறிவு, நூலறிவு, நுண்ணறிவு படைத்தோர் இந்த ஆலயங்கள் மடங்களுக்குத் திருத்தங்கள் பல கொண்டு வருகின்றனர். ஆனாலும் திருவருள் நிரம்பிய துறவிகள் பலர் இங்கு வாழுகின்றனர். அவர்களோ கற்றோர் அறியாத அறிவினர். கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர். காமமொடு கடுஞ்சினங் கடிந்தவர். ஒரு பற்றும் அற்று உருவமில்லாது தானே நிற்கும் தத்துவங் கடந்த பொருளாக மகாதேவாலயத்துத் திரைச்சீலை மறைவில் வீற்று இருக்குங் கந்தப் பெருமானை மன வருத்தமில்லாது கந்தழியாகக் கண்டு வழிபடுபவர். பக்குவம் உள்ளவர்களை உபதேசித்து வழிப்படுத்துபவர். திருவருள் நிரம்பிய இந்தத் துறவிகள் ஆணைவழி நின்றே கதிர்காமத்தைப் புனித நகராக்குந் திருப்பணி புரியும் இயற்கை அறிவு, நூலறிவு, நுண்ணறிவு படைத்த நம் மக்கள் திருத்த வேலைகளை ஆரம்பிக்க வேண்டும். கதிர்காம நடைமுறை அனைத்தும் பண்டைப் பழைய பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை யார்தான் மறுக்க வல்லார்? கதிர்காமத்தான் ஆணைக்கு எதிர் ஆணையும் உளதாமோ?

2. **கதிரைவேல்:-** கதிரமலை இன்றும் புலியுங் கரடியும் இரவில் வந்து ஓலமிட்டு வேலை வணங்குகின்ற புண்ணிய காட்டுத் திருப்பதியாகவே திகழுகின்றது. இதனைக் கண்ணாரக் கண்ட பக்தர்கள் பலர் இருக்கின்றனர். கதிரைமலை வேல் எக்காலத்து அமைந்தது என்று கூறுவார் யாரையும் எவரையும் கண்டிலேம். கேட்டிலேம். ஆதலால் இஃது ஆதியும் அந்தமும் இல்லாததொன்று. இந்த ஒப்பற்ற வேல் ஒன்றே முதலிற் கதிரைமலை உச்சியில் கருங்கல்லில் இயற்கையாக அமைந்திருந்தது. இது சூரர்களையும் சூரபன்மனையுந் தொலைத்தது. இந்த வேல் இலங்கை வாழ் மக்களுக்குச் சிறப்பாகவும், உலக மக்களுக்குப் பொதுவாகவும் அருட்துணை புரிகிறது.

''குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் — இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன் கை வேல்.''

''வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேல் திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவேல் உண்டே துணை.''

என்றெலாந் திருமுருகாற்றுப்படை யுடையாரால் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு போற்றப்பட்டது இந்த வேல். பண்டு இஃது பத்தரை மாற்றுப் பசும் பொன்னாகப் பிரகாசித்தது. பிற்காலத்தில் இதில் பத்தரை மாற்றுப் பசும் பொன்னாலாகிய இரு கண்கள் மாத்திரம் இருந்தன. இன்று பார்ப்போருக்கு இரும்பாகவே தோற்றுகிறது. இதன் மகிமையை அறியாதார் யாரே? இலங்கையிற் சரித்திரப் பெருமை வாய்ந்தது இந்தவேல். இதற்கு முன்னுக்கு நேர்கடனாக வந்த வேறொரு வேலும் நாட்டப்பட்டிருக்கிறது.



3. **கதிரமலைத் தீபம்:-** வேலுக்கு முன்பு இலங்கைத் தோட்டக் கங்காணி ஒருவரால் அனுப்பப்பட்ட பித்தளைப் பெரிய விளக்கு ஒன்று உண்டு. இதற்குத் திருவிழாக் காலங்களில் இவர் நூற்று ஐம்பது ரூபாய் பணமும் விளக்கு ஏற்றும் வேலைகளைப் புரிய ஒரு ஆளும் அனுப்புவார். தேங்காய், பசுநெய், தேங்காய் எண்ணெய், கர்ப்பூரம், சாம்பிராணி ஆதியவை இட்டு இந்தத்திருவிளக்கு ஆறுமணியளவில் கதிரமலையில் அர்ச்சகரால் ஏற்றப்படுகிறது. இது புலரிக்காலம் வரையும் எரியும். இஃது வேதகாலத்துள்ள இருடிகள் வளர்த்த ஓம குண்டத்தையும்ஓமாக்கினியையும் ஞாபகமூட்டுகிறது. முற்காலத்துக்கதிர்காமயாத்திரைசெய்யும் பக்தர்களுள் ஒரு சிலர் தமது வீட்டிலிருந்து புறப்படு முன்பு புனிதமாகப் பயபக்தியுடன் தேங்காய் எண்ணெய் ஊற்றிக் குப்பியில் அடைத்துப் பாதுகாத்து சந்நிதிக்குக் கொண்டு செல்வார்கள். சென்ற அவர்கள் மகாதேவாலயத்தின் பின்புறத்தே பழிபடுத்து வேலவர் உத்தரவைப் பெறுவர். பெற்ற அவர்கள் உடுத்த ஆடைகளுடன் சூரியன் உதிக்க இரண்டு நாழிகைக்கு முன்பு முழுகித் திருநீறு பூசித் தேங்காய், கர்ப்பூரம், பூசைக்குரிய பொருள்களைக் கொண்டு அரோகரா கோசத்துடன் தெய்வமுற்றவர்கள் போலப் பயபக்தி மயமாக மலை ஏறுவார்கள். ஏறித் திருவிளக்கேற்றி அர்ச்சனை செய்விப்பர். கதிர்காம வடிவேலவர் இவர்கள் போம்போதும் வரும்போதும் வழி நீளந் துணை புரிவார். வழி தப்பியவர்களுக்கு வழிகாட்டுவார். இதனாலன்றோ கதிரைமலைப் பள்ளாசிரியர்

''மனத்திற் தவமுற் றிருந்த தொண்டரை
வளர்த்துப் பொருள்கள் கொடுப்பவன்
வான்தென் கதிரை மலையில் வேலன்''

என்று தமது அனுபவ உண்மை காட்டி அழகாகக் கூறுகிறார்.

4. **திருப்பீடமும் பிறவும்:-** இன்று சுப்பிரமணியப் பெருமானது இரு திரு உருவங்கள் உச்சிமலையில் ஒரு அழகிய பீடத்தில் திருக்குடை நீழலில் கண்ணாடிக் கதவுகளின் மத்தியில் அமைந்திருக்கின்றன. அம்மலையில் ஒரு பெரிய மணியும், இரு சிறிய மணிகளும் உள்ளன. இவையெல்லாம் நேர்கடனாக வந்தனவேயாகும். பீடத்தின் இடக்கைப் பக்கமாக ஒரு நிழல்மரம் இயற்கையாக அமைந்துள்ளது. இது

அழகான கொத்துப் பூக்களைப் பூக்கிறது. இதன் கனிகள் நெல்லிக்
கனி போன்றவை. மிக மிகச் சுவையானவை. அண்மையில் கண்ணு
டிக் கப்பல் விளக்குகள் இரண்டு நேர்கடனாக வந்துள்ளன. இவை
சமீபப் பார்வைக்கு வெளிச்சங் குறைவாகக் காணப்படுகின்றன.
ஆனால் தூரப்பார்வைக்கு மிகப் பிரகாசமாகத் தோற்றுகின்றன.

5. உச்சிமலைக்காட்சி:-

''பண்டிதரும் பாமரரும் பார்ப்பாருஞ் சூத்திரரும்
அண்டிக் கதிரைமலை ஐயரிடம் — ஒன்றாக
நின்றநிலை நீயுணரின் நேருமுத்தி தானுனக்கு
நன்று கதிரமலை நாடு''

இங்குற்ற பக்தருள் சாதிமத வேறுபாடு, சிறுமை பெருமை
விருப்பு வெறுப்புக்களை யாம் என்றுங் கண்டிலேம். ஆணவ மலம
றப் பெற்ற ஆத்மீக நிலையைத் தூய அன்பு நிலையை, அருள் நிலை
யைக் கண்டேம். உச்சி மலையில் நின்று பார்க்கும்போது கீழ்த்திசை
யிற் கிருந்தைக் கடல் தோன்றுகிறது. வடமேற்குத் திசையிற் கதிர்
காம வடிவேலவர் கோவில் தோன்றுகிறது. ஏனைய பகுதிகளில் மலை,
காடு, பள்ளத்தாக்கு, குளம், வயல்கள் தோன்றுகின்றன. தங்கமலை
யை உற்றோர் தங்கம் போன்ற மக்களாகவே மாறுகின்றனர். நம்மி
டையே உள்ள பசியையும் நோயையும் போட்டியையும் பூசலையும் போக்கி
வசியையும் வளனையும் உண்டாக்கக் கூடிய ஏமகூடம் இது ஒன்றே என்
பதை ஏறிப்பாருங்கள்.

கதிர்காம மகாதேவாலயத்துட் கந்தழியாக எழுந்தருள் புரியுங்
கந்தப் பெருமான் விரைவில் ஈழம் வாழ் மக்கள் அனைவரதும் ஆன்ம
நாயகனாக எழுந்தருளுவான் என்பதற்குரிய நல்லுற்பாதங்கள் பல
கதிர்காமத்திற் காணப்படுகின்றன. வருங்கால ஈழத்துப் பெருமக்க
ளாக வரவிருக்குங் கல்லூரி மாணவர்களது கதிர்காம விஜயம் கண்
கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. இதனைக் கண்ணுற்றுப் பூரித்
துக் கதிர்காமத்தான் கழலிணை பணிகின்றோம். ஆலயத்து அருவாக
அமர்ந்தருள் புரியும் குமர நாயகன் நமது ஆன்ம நாயகனாக அமர்ந்து
அருள் வாழ்வு வாழத் துணைபுரிவான். அவன் அருவுருவாகும் வேல்
வடிவாகக் கதிரமலையில் அமர்ந்து நமக்கெலாங் காட்சி அளிக்கிறான்
காலைப் பொழுதில் கதிரமலையில் நிற்போர் காட்சி கண்கொள்ளாக்
காட்சியாகும். உதய காலத்து இங்குற்ற உத்தம அறிஞர், திருமுரு
காற்றுப்படை பாடிய நக்கீரரைப் போல இயற்கையோடிணைந்து அழகு
முருகனைக் கண்டு முருக மயமாக மாறுவர் என்பதற்கு ஒரு சிறிதும்
ஐயமில்லை. கிழக்கில் உதயமாகும் பா சூரியன் முருகனுடைய சோதி



சொரூபத்தைக் காட்டுகிறது. நீலக்கடலும் அதில் படியும் பொன்னிறச்
சூரிய இளங்கதிர்களும் அவன் விரும்பி ஏறி விற்றிருக்குங் கோல மயி
லைக் காட்டுகின்றன. அடியவர் தூரத்துள்ள அவனது பிரகாசமான
திருவடிகளை வணங்குவதால் அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானம் அடை
கின்றனர். வள்ளி மணாளன், வண்ணமயிலேறி வந்தருள் புரியும் வடி
வங் காணப் புலவர்காள் வாரீர்! நாமெலாம் நக்கீரரைப் போல

''உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்''

வள்ளியைத் திருமலையில் மணம் புரிய வந்த அழகினைப் பாட
வாரீர்!! வேற்றுமையுள்ள, கதிர்காமத் தெய்யோ என்றும், கதிர்காம
வடிவேலவர் என்றும், கதிரைநபிநாயகம் என்றும் கீழ்ப்படியில்
நின்று கூறியநாம் மேற்படியில் 'வேல் வேல் வெற்றி வேல்' என்று
பாடி ஆடி உயர்படியில் நின்று இலங்கையை ஒற்றுமைப் படுத்தக்
கதிரைமலைக்கு வாரீர்!!!

## அந்தர் யோகம்

இடம்:— கண்டியைச் சேர்ந்த தென்னக்கும்புர சச்சி
தானந்த தபோவனம்.

காலம்:— மேமீ 5, 6, 7, திகதிகள். ஞாயிறு, திங்கள்,
செவ்வாய் ஆகிய மூன்று தினங்கள்.

அன்பர்கள் பலருடைய வசதியை முன்னிட்டு வெசாக்
விடுமுறையை ஒட்டி நடைபெற இருக்கிறது.
பங்குபற்ற விரும்புவோர் பின்வரும் விலாசத்திற்கு
எழுதித் தமது பெயரைப் பதிவு செய்து கொள்ளுமாறு
வேண்டப்படுகின்றனர்.
இடவசதியை முன்னிட்டுக் குறிப்பிட்ட தொகையி
னர் மாத்திரமே பங்குபற்ற முடியும்.

காரியதரிசி, தெய்வீக வாழ்க்கைச் சங்கம்
சச்சிதானந்த தபோவனம், தென்னக்கும்புர, கண்டி.

# பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணருடைய துறவறச்சீடரான
# சுவாமி சரதானந்தர்

(திரு. மா. மகாதேவன் B. A. அவர்கள்)

'பெரியோர்கள், தம்மைப்பற்றிச் சிறிதேனும் குறிக்காமல் தெய்வீகச்சாதனையில் விளங்கி அருளுண்மையைக் காலச் சிலைமீது பதித்துச் சென்றனர். சரித்திர ஆசிரியர்கள் அவர்களைப்பற்றி மௌனம் சாதிக்கின்றனர். ஏனெனில், அவர்களுடைய அருட்சரிதை எழுதுகோலிற்கு எட்டாதது. அவர்களுடைய பெருமை பாரினும் பெரியது. அப்படிப்பட்ட அருட்பெருமை உடையவரே சாரத் சந்திர சக்கரவர்த்தி. **சுவாமி சரதானந்தர்'** இவர், மார்கழி மாதம் 23ம் திகதி 1865 ஆம் ஆண்டு கல்கத்தாவில் அந்தணர் குலத்தில் அவதரித்தார். சாஸ்திர அறிஞரான இவர் மாமனார், இக்குழந்தை எதிர்காலத்தில் பரமாசாரியாராக விளங்கும் என்று உறுதி கூறினார். மகனைப் பெற்றோர்கள் அன்பாகப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தனர்.

அடக்கம், அமைதி ஆகிய நற்குணங்கள் இளமையில் காணப்பட்டன. பாடசாலையில் முதல் மாணவனாகவே விளங்கினார். அறிவோம்பல் உடலோம்பல் ஆகிய பயிற்சிகளில் தேர்ச்சி பெற்றார்.

அடக்கம் ஒடுக்கமட்டுமல்ல, இன்சொல், அருட்சொல் நிறைந்தவர். தன்னலம் கருதாது பிறர்நலத்தையே கருதினார். சிற்றுண்டிக்குப் பெற்றோர் கொடுத்த பணத்தை வறியபிள்ளைகளுக்குக் கொடுப்பார். உடையில்லாதவர்க்குத் தன்னுடையைக் கொடுத்துவிடுவார். யாரேனும் நோயினால் வருந்தினால் சாரத்சந்திரர் கண்காணிப்பார்.

சிறியவயதில் சமயப்பற்றுமாத்திரமல்ல விழாக்கள் கொண்டாடுவதிலும் ஆர்வமுடையவர். நான்கு ஐந்து வயதில் தாயார் பூசைசெய்வதை அவதானித்துப்பார்த்துப் பின்புதானும் அவ்வாறே கிரியைப்பிழையின்றித் தன் நண்பர் முன்னிலையிற் செய்து காட்டுவார், திருவிழாக்காலங்களில் தெய்வச்சிலைகளை வாங்கிப் பூசை செய்துவிளையாடுவார். உபநயனம் முடிந்த பின் வீட்டில் பூசை செய்யும் பொறுப்பு இவர் பொறுப்பாயிற்று. அந்தணகுலத்தவராகையினால் இவர் நாள்தோறும் வேதம் ஓதி நித்திய கருமவிதியில் அதிகவனம் செலுத்தினார்.



1882 ஆம் ஆண்டில் பிரவேசப் பரீட்சையில் தேர்ச்சி பெற்று, மறுவருடம் சவேரியார் கல்லூரியிற் சேர்ந்தார். St. Xavier's College, Calcutta இவருடைய சமயப்பற்றைக் கண்ட கல்லூரி அதிபர் இவருக்கு தான் விவிலிய நூலை கற்பிக்கும் பொறுப்பை மிக ஆவலுடனும் மகிழ்ச்சியுடனும் ஏற்றுக்கொண்டனர். கல்லூரியிற் கற்கும்போது இவருடைய உறவினர் சஸ்ஷி வுஷன் சக்கரவர்த்தி Shashi Bhushan Chakravarti இவர் இல்லத்தில் தங்கி வேறொரு கல்லூரிக்குச் சென்றனர். இவருடைய நண்பர் ஒருவர் தக்கிணேஸ்வரத்திலுள்ள மகானைப் பற்றிக் கேள்விப்பட்டதாகச் சொன்னார் மூவரும் அம்மகானைக் காணவேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

1883 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் சாரத்சந்திரரும் சஸ்ஷியும் தக்கிணேஸ்வரம் வந்து சேர்ந்தார்கள். பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் அவர்களை வரவேற்று துறவறத்தின் மேன்மையை விளக்கினார். வலியுறும் இவ்வார்த்தைகளைக் கேட்ட இவ்விளைஞரின் உள்ளங்கள் பூரித்தன. துறவறமே தங்களுக்கு ஏற்றதென்று உறுதி கொண்டனர் பகவான் இராமகிருஷ்ணரை ஒரு நிறைஞானியென ஏற்றுக் கொண்டனர். பகவானுடைய வேண்டுகோட்கிணங்கி சாரத்சந்திரர் அடிக்கடி தக்கிணேஸ்வரம் வந்து பல நாள் அவருடனே இருந்து விடவும் செய்தார்.

"உமது இஷ்ட தெய்வம் சிவன்" என்று சொல்லி மந்திர உபதேசம் செய்தார் பகவான். சகல உயிர்களிலும் ஆண்டவன் இருப்பதைக்காண விரும்பினார் சாரத் சந்திரர் "அது சாதனையின் எல்லை; உடனடியாக அந்நிலையை அடையவியலாது" என்றார் பகவான். "அந்நிலையன்றி வேறொன்றும் எனக்குத் திருப்தியளிக்காது," என்றார் பகவான்.

சுவாமி விவேகானந்தரை சாரத்சந்திரர் சந்திக்கும்வண்ணம் செய்தார் பகவான். இருவரும் பெரும் நட்புக்கொண்டனர். பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தர் சொல்வதைத் தட்டமாட்டார். அவரை ஒப்பற்ற தலைவரென ஏற்றுக் கொண்டார்.

சாரத் சந்திரரை சிறந்த வைத்தியனாக விளங்கவைக்க வேண்டுமென்று தந்தையார் இவரைக் கல்கத்தா வைத்திய கல்லூரியிற் சேர்த்தார். சுவாமி விவேகானந்தரும் இதை வரவேற்றார். ஆனால் இக்கல்லூரிப்படிப்பு நெடுநாள் நீடிக்கவில்லை. பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் தொண்டையில் ஒருபிளவை உண்டாயிற்று. அவருக்குச் சிகிச்சை செய்வதன் பொருட்டு கல்கத்தாவிலுள்ள காசிப்பூருக்கு அழைத்து வந்துவிட்டார்கள்.

அவருக்குப் பணிவிடை செய்வதற்காகச் சீடர்கள் தங்களுக்கிடையிலே முறை வைத்துக்கொண்டு அல்லும்பகலும் அவருக்கு அருகில் இருந்து கண்காணித்தார்கள். இவர்களுள் சாரத் சந்திரரும் ஒருவர்.

சாரத்சந்திரரின் தந்தையார், சேயின் பற்றற்ற வாழ்வைக் கண்டு அச்சமடைந்தார். தங்களுடைய பரம்பரைக் குருவைவிட்டு வேறு குருவை ஏற்றுக் கொண்டார் என்று மனவருத்தமடைந்தார். பரம்பரைக் குரு பகவானை விடச் சிறந்தவர் என நிரூபிக்க காசிப்பூருக்கு அழைத்துச் சென்றார். பரம்பரைக் குரு பகவானைக் கண்டதும் வியப்புற்றார் "இப்படிப்பட்ட மகானைக் குருவாகக் கிடைத்த உன்மகன் பாக்கியவான்" என்று சாரத் சந்திரருடைய தந்தையாரிடம் இரகசியமாகக் கூறினார்.

முதல் திகதி தைமாதம் 1886ம் ஆண்டு பகவான் ஸ்ரீ இராமக்கிருஷ்ணர் தமது சீடர்களையும் அங்கே வந்தவர்கள் எல்லோரையும் ஆசீர் வதித்தனர். சாரத் சந்திரர் மட்டும் அவ்விடத்திற்குப் போகவில்லை. தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச் செய்து கொண்டிருந்தார் "ஏன் நீங்கள் போகவில்லை" என ஒருவர் வினவ எனக்குத் தேவையானவற்றைப் பகவான் தருவார் ஆகையால் நான் போகவில்லை" என விடையளித்தார். சாரத் சந்திரரிடம் தற்பெருமை, குலப்பெருமை இருக்கிறதாஎன்பதைச் சோதிக்கிறதாக பகவான் ஒருநாள் பிச்சை எடுக்கும்படி சொன்னார். குருவின் கட்டளையை நிறைவேற்றும் சீடன், கிராமத்திற்குச் சென்று பல இன்னல்களுக்கு ஆளாயின போது மனத்தளர்ச்சியின்றி மகிழ்ச்சியுடன் பிச்சை எடுத்தார்.

பகவான்ஸ்ரீராமக்கிருஷ்ணர்மகாசமாதியடைந்தபின்னர் சரத்சந்திரர் தனது இல்லத்திற்குச் சென்றார். சுவாமி விவேகானந்தரும், சுவாமி பிரமானந்தரும் அடிக்கடி இவர் வீட்டுக்கு வந்து தங்களுடைய குருநாதரின் வாழ்வைப் பின்பற்றித் தாங்களும் அத்தகைய வாழ்வு வாழ வேண்டு மெனக் கூறுவார்கள். சாரத்சந்திரரும் அடிக்கடி ஆச்சிரமத்திற்கு வந்து காலம் கழித்தனர். பெற்றோர்கள் போக வேண்டாமென்று வற்புறுத்தின பொழுதும் இவருடைய மனம் தளர்ச்சியடையவில்லை. ஈற்றில் இவர் விரும்பியபடி துறவறம் பூண பெற்றோர்கள் சம்மதமளித்தனர். 1887ஆம் ஆண்டு சாரத்சந்திரர் காவியுடை அணிந்து சுவாமி சரதானந்தர் என்னும் பெயரையும் பெற்றனர்.



இதன் பின் தியானத்திலேயே காலம் கழித்து வந்தார். உறக்கமின்றித் தியானத்திலேயே இராக் காலங்கள் கழிந்தன. இறைவனைப் போற்றிப் புகழ்ந்து இனிமையாய்ப் பாடியதைக் கேட்போர் மெய்சிலிர்த்திருப்பார்கள். தீயில் இட்ட மெழுகுபோன்று சுவாமி சரதானந்தரின் உள்ளம் கடவுளை நாடி நைந்துருகி வந்தது. தீர்த்த யாத்திரை செய்ய மனம் கொண்டு பூரிக்குச் சென்றார். பின் காசி, அயோத்தி, ஹிரிஷிகேஸ், கேதார்நாத், பத்திரிநாத், மதுரா, பிருந்தாவனம் ஆகிய தலங்கள் பலவற்றைப் பார்த்த பிறகு சுவாமிகள் பராநகர் ஆச்சிரமத்தை வந்து சேர்ந்தார். தூய அம்மையார் சாரதாமணியைத் தரிசிக்க ஜயராம் பட்டிக்குப் போனார். அங்கே பல நாட் கழித்தபின் பராநகர் ஆச்சிரமத்தை வந்தடைந்தார்.

அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தர் தனது பணி பெருக்க மடைந்து விட்டதென்பதை அறிந்து, சுவாமி சரதானந்தரைத் தனக்குத் துணை புரியுமாறு வரவழைத்தார். சுவாமி சரதானந்தர் 1896ஆம் ஆண்டில் லண்டன் மாநகர்க்கு வந்தார். அங்கே சில நாட் தங்கித் தர்மப் பிரசாரம் செய்தபின் நியூயோர்க் என்னும் அமெரிக்க நகர்க்குப் புறப்பட்டார். சுவாமிகள் அமெரிக்காவில் பல இடங்களுக்குச் சென்று தூய மனமுடையவர்களிடத்து ஞான விளக்கேற்றி வந்தார். ஈற்றில் நியூயோர்க் நகரத்திலுள்ள வேதாந்த சபைக்குத் தலைவராய்த் தொண்டாற்றினார்.

சுவாமி விவேகானந்தர் இந்தியாவில் ஸ்தாபித்த ஸ்ரீ இராம கிருஷ்ண மடத்திற்குச் சிறந்த ஒருவரைக் காரிய

தரிசியாக்க வேண்டுமென்று எண்ணிச் சுவாமி சரதானந்தரை இந்தியாவிற்கு வரவழைத்தார். 1898ம் ஆண்டு தை மாதம் 28ந் திகதி சுவாமி சரதானந்தர் புறப்பட்டு லண்டன், பாரிஸ், ரோமாபுரி முதலிய இடங்களைப் பார்த்துவிட்டுச் சுவாமிகள் இந்தியாவிற்கு வந்ததும் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனின் காரியதரிசியாக்கப்பட்டார். இறுதிக் காலம் வரையிலும் சுவாமிகள் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனின் காரியதரிசியாகப் பணியாற்றினார். இப் பணியை விட வருவோரை உபசரித்தல், உபதேசம் செய்தல், பிரம்மச்சாரிகளைப் பயிற்றல், பேரறிவு புகட்டும் நூல்கள் பலவற்றை ஆராய்ந்து உரை கூறுதல் ஆகிய பணிகள் பலவற்றையும் ஆற்றினார். பொறுமையே வடிவெடுத்த சுவாமிகள் ஒருமுறை வள்ளத்தில் செல்லும் போது ஆற்றில் பெரும் புயல் வந்தது. மற்றப் பிரயாணிகள் எல்லோரும் திகைத்து அஞ்சினர். சுவாமிகள் சாந்தமாக இருப்பதைக் கண்ட பக்தர் ஒருவர் அவர் வாயில் இருந்த சுருட்டை மிகக் கோபத்துடன் இழுத்து வீசினார். சுவாமிகள் புன்முறுவலுடன் சாந்தமாக இருந்தார். பிற்காலத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தைப் பற்றி யாரேனும் குறை கூறினால் சுவாமிகள் ''பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் எல்லாவற்றையும் சரியாக்குவார்; அதைப் பற்றிக் கவலைப்படாதே, பொறுமையாய் இரு'' என்று தாழ்மையாகக் கூறுவார். இந்தியாவின் பல பாகங்களுக்கும் சென்று தர்ம உபதேசம் செய்து மடத்தின் வளர்ச்சிக்குப் பணம் திரட்டினார். சுவாமி திருகுணாதீத்தானந்தர் அமெரிக்காவுக்குச் சென்றதும் உத்வோதன் என்னும் மாதப் பத்திரிகையின் ஆசிரியரானார் சுவாமி சரதானந்தர். சாரதா அம்மையார் தங்குவதற்கும் உத்வோதன் நிலையம் அமைப்பதற்கும் ஓர் இல்லம் தேவைப் பட்டது. சுவாமிகள் கடன்பட்டு இக் கட்டிட வேலையை ஆரம்பித்தார். கடனை நீக்குவதற்காகச் சுவாமிகள், 'ஸ்ரீ இராமகிருஷ்ண லீலா பிரசங்க' என்னும் நூலை எழுதத் தொடங்கினார். இந்நூல் ஐந்து பாகங்களாக வெளிவந்தபோதும்முடிடையயவில்லை. சாரதாஅம்மையார், 1920ல் மகா சமாதியடைந்ததும் சுவாமிகளின் நூல் முற்றுப் பெறவில்லை. சாரதா அம்மையார், சுவாமி பிரமானந்தர் சமாதியடைந்ததும், சுவாமி சரதானந்தரின் பொறுப்புக் கூடியது.

சாரதா அம்மையாரின் பிறப்பிடமாகிய ஜயராம்பட்டியில் அம்மையாரின் ஞாபகத்திற்காக ஓர் ஆலயம் அமைத்தார். ''இவ்வாலயத் திருப்பணி முடிந்ததும், நான் ஓய்வு பெறுவேன்'' என்று சொல்லி நிறைவேற்றினார்.



1926ம் ஆண்டு ஸ்ரீ இராம கிருஷ்ண மடத்தின் பொதுக் கூட்டத்தின் பின், சுவாமிகள் வழிபாட்டினிலும் தியானத்திலும் ஆழ்ந்தார். உடல் நலம் குறைந்த போதும் சுவாமிகள் தெய்வீக சாதனையை விடவில்லை.

1926ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சுவாமிகள் வழக்கம் போல் காலையில் தியானத்தில் அமர்ந்தார். அன்று நெடுநேரமிராமல் விரைவாக எழுந்து ஆதிமூலத்திற்குச்சென்று பகவான் இராமகிருஷ்ணர் சாரதா அம்மையார் இருவரையும் வணங்கி ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். இவ்வாறு பலமுறை செய்தார். மாலை வழிபாட்டுக்கு சுவாமிகள் போகாமல் தன்னறையில் தியானத்தில் இருந்தார். அன்றிரவே சுவாமிகள் இறைவனடி சேர்ந்தார்.

சுவாமி சரதானந்தரைப் போன்ற சாதுக்கள் கிடைப்பது அரிதிலும் அரிது. தான் பெற்ற அருட் செல்வத்தை ''ஸ்ரீ இராமகிருஷ்ண லீலா பிரசங்க'' என்னும் நூலில் மக்களின் நன்மைக்காக வெளியிட்டார். கருமம், ஞானம், யோகம், பக்தி இவை நான்கும் இவர் வாழ்வில் சரி சமமாக மிளிர்ந்தன. ஆத்ம சொரூபத்தை முற்றும் அறிந்துள்ள சுவாமி சரதானந்தர் ஸ்ரீமத் பகவத் கீதையில் கூறியது போல் ஆத்ம திரு பக்தனாக குணாதீதனாக விளங்கினார்.

**'துன்பத்தையும் இன்பத்தையும் சமமாகக் கொண்டவன், ஆத்மாவில் நிலைத்தவன், மண், கல் பொன்னை நிகராகக் காண்பவன், இனியதையும், இன்னாததையும் ஒன்றாக ஓர்பவன், பேரறிஞன், இகழ்ச்சி புகழ்ச்சியை ஒரே பாங்குடன் பார்ப்பவன், மான அவமானத்தை நிகராக நினைப்பவன், நண்பனிடத்தும், பகைவனிடத்தும் ஒரே பாங்குடையவன், தனக்கெனத் தொழில் செயயாதவன் யாரோ அவன் குணாதீதன்'**

# கடோப நிஷதக் கருத்து

(சுவாமி சிவானந்த சரஸ்வதி)

ஓம். அது எம் இருவரையும் (குரு சிஷ்யர்களாகிய எங்களை) காப்பாற்றுமாக. அது எம் இருவரையும்(முக்தி) இன்பத்தை நுகரச் செய்யுமாக. யாம் இருவரும் திரு நூல்களின் உண்மைக் கருத்தை யறிவதற்கு முயல்வோ வோமாக. எம் கல்வி மிகுந்த அறிவு படைத்ததாயிருக்கு மாக. யாம் ஒருவர் மற்றவருடன் ஒருகாலும் சச்சரவு செய்யாதிருப்போமாக.

ஓம் அமைதி! அமைதி!! அமைதி!!!

1. அருட்டெரிப்பு அல்லது நேர் உள்ளுணர்வே (அபரோக்ஷானுபூதியே) ஆத்ம அல்லது தலைசிறந்த ஆன்ம அறிவின் மூல முதல்.

2. இவ் வாத்மன் அறியப்படுவது கஷ்டம். அது உறுபல நுட்பமானது. அது வாதத்தினால் அடையப்பட முடியாது.

3. தன்னிறைவுப் பேறடைந்த குரு சாதகர்களை ஆன்மீகப் பாதையில் வழி நடத்துவதற்கு அவசியம் வேண்டும்.

இன்பம் தருவதிற் கெதிராக நன்மை தருவது.

4. ஒன்று நல்லது; அதே வேளையில் மற்றது இன்பமானது. யார் இவற்றிற்கிடையில் நல்லதை (சிரேயஸை)த் தெரிந்தெடுக்கிறானோ அவன் பாக்கியவானே; ஆனால் யார் இன்பமானதை (பிரேயஸை)த் தெரிந்தெடுக்கிறானோ அவன் உண்மை அடைவை இழக்கிறான்.

5. சிரேயஸ் என்பது நன்மை, தலைசிறந்த ஆன்மா, அதன் அறிவு மோட்சம் அல்லது முடிவான விடுதலைக்குச் செலுத்துகிறது.

6. யாது இன்பமானதோ அது பிரேயஸ். அது புலனுகர்ச்சி இன்பம்.



7. தனியான்மா மூலாதாரமாக பிரமத்துடன் அநந்நியமானது. மாயை அல்லது அஞ்ஞானத்தால் அதுதான் பந்தப் பட்டதாயும், வினைகளாற்றுவதாயும், விமோசனம் அல்லது விடுதலை பெறுவதற்கு முயற்சிப்பதாயும் கருதுகிறது.

8. யார் உண்மை நெறியிற் செல்கிறானோ யார் நல்லதை ஏற்றுக்கொள்கிறானோ, அவன் அழிவின்மையும் நித்தியானந்தமும் அடைகிறான்; ஆனால் யார் இன்பமானதை—அதாவது புலனுகர்ச்சி இன்பங்களைத் தேர்ந்தெடுக்கிறானோ அவன் வாழ்வின் அடைவை இழந்து பற்பல விதமான துயர்கள், துக்கங்கள், தொல்லைகள் அனுபவித்துப் பிறப் பிறப்பாகிய சக்கரத்திற் சிக்குகிறான்.

9. பிரேயோ மார்க்கமே ஞானப் பாதை. பிரேயோ மார்க்கம் என்பது அஞ்ஞானப் பாதை அல்லது இன்பப் பாதை.

10. ஆத்மனின் நித்தியானந்தத்தை நீ அடைய விரும்பினால் புலனுகர்ச்சி யின்பங்களை நீ இரக்க மின்றிக் கைவிட வேண்டும்.

11. நல்லதும் இன்பமானதும் மனிதனைக் கைப்பற்றுகின்றன. கூரறிவுள்ள மனிதன் அவற்றைப் பரிசோதித்துப் பிரித்துணர்கிறான்; ஆனால் அறிவிலி உடம்பின் பொருட்டு இன்பமானதைத் தெரிந்தெடுக்கிறான்.

12. ஞானப் பாதையும் இன்பப் பாதையும் மனிதனுக்குத் திறக்கப் பட்டிருக்கின்றன. அவன் தான் விரும்பும் ஏதாவது பாதையைத் தெரிந்தெடுக்கலாம்.

13. அன்னம் பாலைப் பாலுந் தண்ணீருஞ் சேர்ந்த கலவையிலிருந்து பிரித்துப் பாலை மாத்திரம் குடிப்பது போல் அறிவாளியும் வாழ்வில் நல்லதைப் பிரித்தெடுத்து நல்லதை மாத்திரம் பின்பற்றுகிறான்.

14. சிரேயோ மார்க்கம் அறிவின்மை, விடுதலை, நித்தியானந்தம் முதலியவற்றிற்கும் பிரேயோ மார்க்கம் நிலையின்றிய சிற்றின்ப நுகர்ச்சிகளுக்கும் செலுத்துகிறதென்று விவேகிகள் அறிவார்கள். ஆகையால் அவர்கள் இன்பமானதுக்குப் பதிலாக நல்லதையே விரும்புகிறார்கள்.

15. நல்லதையும் இன்பமானதையும் பிரித்தறிய அறிவுக் கூர்மையில்லாத, அடைவு, அதையடைவதற்குரிய சாதனங்கள், அதன் பலன் முதலியவற்றைப் பற்றிய கருத்தில்லாத மூடர் அல்லது அறிவிலிகள் உடலைக் கொழுக்கச் செய்வதற்கும் காப்பாற்றுவதற்கும் இன்பம் துய்த்து நுகரும் பொருட்டும் பேராவல் கொண்டு இன்பமானதைத் தெரிந்தெடுக்கிறார்கள்.

16. இருபாதைகளும் நிச்சயமாக முரண்பாடானவை, மிக வேறானவை, அவை வெவ்வேறு வினைகளுக்குச் செலுத்துகின்றன. அவை ஒளியும் இருளும்போல் எதிர் மாறானவை.

17. அவித்தை அல்லது அறியாமையே இன்பமானதின் பாதை. அது கடுந்துயர், கவலை, பந்தம் முதலியவற்றிற்குச் செலுத்துகிறது.

18. வித்தை அல்லது ஞானமே நல்லதின் பாதை. அது நலந் தருவது அது சுதந்தரத்தையும் முடிவான விடுதலையையும் அருள்கிறது.

### மயக்கக் குறிகள்

19. இருள் மத்தியில் வசிக்கும் ஆனால் தங்களை மெய்யறிவுள்ளவர்களாகவும் கற்றறிந்தவர் களாகவும் கருதும் அஞ்ஞானிகள் குருடருக்குக் குருடர் வழிகாட்டுவதுபோல் பல நெறியல்லா நெறிகளில் மயக்கப்பட்டுச் சுழல்கிறார்கள்.

20. சம்சாரத்தில் வசிக்கும் மனிதர் அறியாமை அல்லது அடர்த்தியான இருளில் இருக்கிறார்கள். அவர்கள் செம்மையான ஓர்ந்தறிவோ விவேகமோ பெற்றிருக்கவில்லை.

21. அவர்கள் ஆயிரத்துக்கு மேலான எதிர்பார்த்தல்களாகிய கட்டுக்களால் பிடிக்கப்பட்டுப் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள், மக்கள், மனைவி, செல்வம், சொத்து, வீடு முதலியவற்றின் பற்றுதலால் இயற்றிய ஆயிரத்துச் சொச்ச வலைகளிற் சிக்குண்டிருக்கிறார்கள்.

22. அவர்கள் அறிவற்றவர்களே; ஆனால் தங்களை நுண்புலமுள்ளவர்களாகவும் சாஸ்திரங்களில் மிக வல்லவர்களாகவும் கருதுகிறார்கள்.



23. அவர்கள் ஈடேற்றம் அடைவதில்லை. அவர்கள் மேலும் மேலும் பிறப்பிறப்புகளாகிய சக்கரத்தில் அகப்படுகிறார்கள்.

24. அவர்கள் பிறப்பு, மூப்பு, நோய், துன்பம், துயரம், மரணம் போன்ற சம்சாரத்தின் வலிகளையும் வேதனைகளையும் அனுபவிக்கிறார்கள்.

25. கரடு முரடான, மேடுபள்ளமுள்ள பாதைகளிற் குருடரால் வழிநடத்தப்படும் குருடர் அல்லற்படுவது போல் அறிவிலிகளும் துன்பம் அனுபவிக்கிறார்கள்.

26. மடைத்தனமான, செல்வ மயக்கத்தால் மயக்கமடைந்திருக்கும் அஞ்ஞானிக்கு மறுமைக்குரிய பாதைதோன்றுவதில்லை. ''இதுவே உலகம்; வேறில்லை'' என்று அவன் கருதுகிறான். இவ்வாறாக அவன் மரண வலைக்குள் வீழ்கிறான்.

27. செல்வமே உலகத்தில் அதிக வெறியூட்டும் பொருட்களில் மிக நிரம்ப வலிமை வாய்ந்தது. அது செருக்கையும் பகட்டையும் பிறப்பிக்கிறது. அது மனக் கலக்கங்களை யுண்டாக்கி ஓர்ந்தறிவை இருளடையச் செய்கிறது. அது நுண்ணறிவை மறைத்து வைக்கிறது.

28. விடுதலை யடைவதற்கு வேண்டிய சாதனங்கள், தன் மனைவி, மக்கள் செல்வம் முதலியவற்றைப் பற்றி என்றும் எண்ணுகிற, செல்வத்தினால் ஏற்பட்ட இருளினாற் சூழ்ந்து கொள்ளப்பட்ட கவனமில்லாத மனிதனுக்குத் தெரிவதில்லை.

29. புலனுகர்ச்சி யின்பமே உலகியற் பற்றுடைய மனிதனின் அடைவு. பணமே அவனது கடவுளும் அடைவும். ''தின்று குடித்துக் களிப்பாயிரு'' — இதுவே அவனது தலைசிறந்த தத்துவ தர்சனம்.

30. பலர் ஆத்மனைப் பற்றிச் செவி கொள்வதற்குக் கூட இயலாதிருக்கிறார்கள். ஆத்மனைப் பற்றிக் கேட்டபொழுதும் பலர் அதைப் புரிந்து கொள்வதில்லை; ஏனெனின், அவர்களின் மனங்கள் தூய்மைப் படுத்தப்படவில்லை.

# ஹிந்து மதச் சிறப்புகள்

[பண்டிட் ஜி. கண்ணைய யோகி — அம்பத்தூர்]

பிறவிப் பெரும் பயனைப் பெற மக்களுக்கு வழிகாட்ட உலகில் பல மதங்கள் தோன்றின. அவைகளில் தலை சிறந்தது ஹிந்து மதமென்பதை பொது நோக்குடைய அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆராய்ச்சி மனப்பான்மையுடன் மதங்களைப் பரிசீலித்த பல கிறிஸ்தவர், மகமதியர், புத்தர் போன்றாரும் இதை ஒப்புக்கொண்டுள்ளனர். இதை வலியுறுத்தும் சில வுண்மைகளை ஆராய்வோம்.

1. ஹிந்து மதம் தவிர மற்றைய மதங்களெல்லாம் கால வரையறையில், மனிதனின் இடைக்காலத்தில் தோன்றியவையே. மனிதனுடன் பிறந்து, மனிதத் தொன்மையையே தன் தோற்றமாகக் கொண்டது ஹிந்து மதம். அதனாலேயே அதை சனாதன மதம் என்று சொல்லுகிறோம்.

2. மற்ற எல்லா மதங்களும், அம்மதக் கோட்பாடுகளைப் பின்பற்றுபவர்களுக்கு, இறந்தபின் மோக்ஷத்தைக் காட்டுகின்றன. ஹிந்து மதம் ''மனிதன் இம்மண்ணுலகில் வாழும்போதே மோக்ஷசுகத்துடன் வாழவேண்டும், இம்மண்ணுலகில் இருக்கும்போது பெறாத எதையும் மனிதன் இறந்தபின் பெறமுடியாது; இறந்த பின் சுகம் பெறுவதற்கான உத்திரவாதம் அவன் இருக்கும் போதே அதைப்பெறுவதில் தான் இருக்கிறது'' எனக்கூறுகிறது. பிரபஞ்சத்தைப் பற்றியும் ஆராயும் இன்றைய ஆன்மீகக் கலைகளும் (Occult Science) ஹிந்து மதத்தின் கருத்தே சரியென வற்புறுத்துகின்றன. பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் மனிதனில் இருக்கிறது பிரபஞ்சத்தின் எந்தப்பகுதியிலும் அவன் அனுபவிக்கக்கூடிய சுகத்தை, அதற்குரிய சூக்குமக் கருவிகளை (அந்தக் கரணங்களைக்) கொண்டு மனிதன் இங்கேயே அனுபவிக்கமுடியும்; மண்ணுலகில்தான் மனிதர்கள் கர்மம் புரிய முடியும், சுவர்க்காதிலோகங்கள் கேவலம் போகபூமிகள்தாம்; அதனால் இங்கு முயற்சித்துப் பெறாதயெதையும் மனிதன் வேறெங்கும் பெற முடியாது'' என ஆன்மீக ஆராய்ச்சி கூறுகிறது. அதனால் இவ்விஷயத்தில் ஹிந்துமதம் சொல்வதே ஆராய்ச்சிக்கு ஒத்ததாயிருக்கிறது.



3. ''மோக்ஷம்போன்ற உயர்ந்தநிலைகளிலும்மனிதன் மனிதனாகவே, இருந்துஇறைவனின் அருளால்கிடைக்கும்இன்பங்களை என்றைக்குமாக அனுபவித்துக் கொண்டிருப்பான்'' என மற்ற மதங்கள் கூறுகின்றன. ''மனிதன் தன் மனிதத்தன்மையைக் கடந்து தெய்வத் தன்மை யெய்தி ஒருவரால் கடவுளால் — கொடுத்துப் பெறவேண்டியவனாயில்லாமல் தானே அவைகள் கர்த்தாவாக மாறி இன்பங்களை அனுபவிப்பான்''என ஹிந்துமதம் கூறுகிறது. பிரபஞ்சப் பொருள்களிலெல்லாம் இறை சக்தியிருப்பதையும், ''மனிதனைத் தன்னைப் போல் படைத்தான்'' என்ற பைபிள் வாக்கியத்தையும் ஆன்மாக்கள் பரமான்மாவின் இனமானவை என்பதையும் ஒப்புக்கொண்டால் இந்த விஷயத்திலும் இந்துமதம் கூறுவதே சரியாயிருக்க வேண்டுமெனத் தெரிந்து கொள்ளலாம்.

4. மற்றமதங்களில் கூறப்படும் பிரார்த்தனைகள் வழிபாட்டு முறைகளெல்லாம் இறைவன் உதவியால் தன் பாவங்களைப் போக்கிக்கொண்டு மன்னிக்கப்பட்டு அதன் பயனாய் மோக்ஷசுகத்துக்கு அதிகாரியாவதற்கே உதவுகின்றன. ஹிந்துமதத்தின் பக்தி, யோகம், சாதனைகளை இறை சக்தியை ஈர்த்து, தன் வசப்படுத்தி, அதைக் கொண்டு தனக்கு வேண்டுமான சகலத்தையும் பெற்றுக்கொள்ள வழிகாட்டுகின்றன. ''என்னைக் கொண்டுன்னி லிட்டேன், என்னையும் உன்னுள் வைத்தேன்'' என்ற ஆழ்வார் பாடல் ஹிந்து மதத்தின் உயரிய தனிச்சிறப்பை உணர்த்துகிறது.

5. தெய்வ சக்திகளை மந்திரங்களால் வசப்படுத்திப் பயன் பெறும் முறைகள் ஹிந்து மதத்திலுள்ளதுபோல் வேறெந்த மதத்திலும் இல்லை. இதை உத்தேசித்தே ஹிந்து மதத்தத்துவங்களை அப்பியாச மூலம் நன்கறிந்து, பிறருக்கும் எடுத்தோதி வரும் ஆத்மயோக ஞான சபை அவ்வப்போது யாக பூஜைகளை நடத்தி வருகிறது. இதில் பங்கு கொள்ளும் நோயாளிகள் குணமடைகிறார்கள். துன்பங்களால் வாடுபவர்கள் துன்பந்தீர்ந்து இன்பம் பெறுகிறார்கள். ''இயேசுவின் பிரார்த்தனையால் அற்புதங்கள் செய்யலாம்'' என்று பறைசாற்றும் கிறிஸ்தவ அன்பர்கள் இந்த யாக பூஜைகளில் பலன் பெறும் மக்களின் தொகையைக்கண்டால் மிரண்டு போவார்கள். 1962ம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில் இச்சபையின் மூலம், சென்னையில்பிரம்மகாயத்ரீயாகபூசனைநடைபெற்றது. அதில் பங்குகொண்டவர்கள் அடைந்த பலன்களை எழுதுவ

தாலுல் சபையில் நிம்மதியிருக்காது என அஞ்சுகிறோம். பேச வே முடியாத, நடக்கவே முடியாத பிறவிக் குற்றம் குணமாயிற்று, நாட்பட்ட நோய்கள் குணமாயின. அப்போது வெளியிட்ட ''காயத்ரீ சகஸ்ரநாமம்'' தமிழில் மூலமும், உரையும் கொண்டது, அம்பத்தூர் சபாவினும், இலங்கைக் கிளையிலும் ரூ. 1—50க்குக் கிடைக்கும். இப்படிப்பட்ட முறை உலகின் வேறெந்த மதத்திலுமில்லை. தசரதன் யாக பூஜையால் மக்களையடைந்தான், ராஜசூயயாக பூஜையால் சக்கரவர்த்திகளானோர் சரித்திரம் பல.

6. ''ஜடப் பொருளும் பரம்பொருளும் வேறு, வேறு, ஜடத்தில் இறைவனை சம்பந்தப்படுத்த முடியாது'' என மற்ற மதங்கள் நம்புகின்றன. ஜட உருவின் வழி இறை சக்தியை விழிப்பிக்கும் வழியை ஹிந்து மதம் கண்டிருக்கிறது. அதனுலேயே பற்பல உருவங்களில், பல கோவில்களை ஏற்படுத்தி ஹிந்துக்கள் வணங்குகிறார்கள். கண்ணுக்குத்தெரிவது கல்லாயினும், அதன் வழி இறை சக்தி வெளிப் படுவதை ஞானக்கண்ணுல் அனைவரும் காணலாம். ஆத்மயோக ஞான சபாவில் பயிற்சியடைந்த பலர் இன்றும் பலகோவில்களின் மூலஸ்தானத்தில் இறை சக்தியை சேதன உருவில் கண்டு களிக்கிறார்கள். பிரம்ம காயத்ரீயாகத்திற்காகச் செய்யப்பட்ட வெள்ளி காயத்ரீ உருவில் சூக்ஷ்ம காயத்ரிதேவி எழுந்தருளியதை எல்லா உறுப்பினர்களும் தம் கண்ணுரக் கண்டு கண்ணீர் மல்க வணங்கி அருள் பெற்றனர். இத்தகைய, ஜடத்தில் இறைசக்தியைக் கொணரும் முறையை இன்றும் ஹிந்து மதமே அறியும்.

7. மற்ற மதங்களைக் கண்டு பிடித்தவர்கள் மண்ணுலகில், மனித வடிவில் பிறந்தவர்கள், ஹிந்து மதத்தைத் தோற்றுவித்தவர் சாஷாத் பிரபஞ்சத்தைப்படைத்த இறைவனே ''ஸ்ருண்வந்து விஸ்வே அமிர்தஸ்ய புத்ரா'' அமிர்தத்தன்மை படைத்த என் புத்திரர்களே கேளுங்கள்—என்று தொடங்கி, பரம் பொருளே ஹிந்துமதசிந்தாந்தங்களை சனகாதியர், சப்த ரிஷிகள் மூலமாக மக்களுக்குப் போதித்தது. ஆகவே, ஹிந்து மதம் தெய்வ மதம், இறை மதம், சனுதன மதம், சக்தி மதம்.

8. மறுபிறவி, கர்மாபோன்ற இன்றைய ஆராய்ச்சியாளர்களால்நிருபிக்கப்பட்டஉயரியதத்துவங்கள்ஹிந்தும் தம் தவிர மற்றெம் மதத்திலும்விளக்கமாய்க் காணமுடியாது. ஹிப்னுடிசத்தில் கடந்த பிறவிகளை யறிந்து, ஆராய்ந்து, அவை உண்மைதானெனக்கண்டுபிடித்திருக்கும் சம்பவங்கள் பல உண்டு.



ஆகவே, இத்தகைய சிறப்பு மிகுந்த ஹிந்துமதத் தத்துவங்களைத் தற்காலக் கல்வி முறையால் புரிந்து கொள்ள முடியாத பலர் ஹிந்து மதத்தைப் பற்றி நையாண்டி செய்யக் கேட்டு மனம் வருந்துகிறோம். ''வாருங்கள் ஹிந்துக்களே! இங்கே, இப்போதே இறைவனைக்கண்டு, அவனருள் பெற்று, பாபங்களைப் போக்கி, மோக்ஷ சுகத்தை இம்மண்ணுலக வாழ்விலேயே அனுபவிக்க உங்களுக்கு வழிகாட்டுகிறோம். மண்ணுலகில் மோக்ஷ சுகம் பெற விரும்பும் மற்ற மதத்தினர்க்கும் யாம் வழி காட்டுகிறோம்.

விபரங்கள்;—

ஆத்மயோக ஞான சபா,
அம்பத்தூர் அல்லது 108, பராக்ரம ரோட், கொழும்பு.
என்ற விலாசங்களில் கிடைக்கும்.
சுபம், சாந்தி.

---


# யோக வித்யா பயிற்சி

யோக வித்தையின் இரசியங்கள், மன ஆத்ம சக்தியை வளர்க்கும் முறைகள், தெய்வ சக்திகளின் தொடர்பு கொள்ளும் முறைகள் இவையெல்லாம் விஞ்ஞான விளக்கங்களுடனும், பரீட்சா முறைகளுடனும் தபால் மூலம் கற்பிக்கப்படும்.

**ஆத்ம யோக ஞான சபை,**
*[இலங்கை கிளை]*
*108, பராக்ரம ரோட்,*
*கொழும்பு—14*

சிவானந்தாய நம:

# எளிதில் சுவர்க்கம்!

(தி. கி. லக்ஷ்மி — மதுரை)

புராணங்களின் மூலமாகவும், பெரியோர்களின் மூதுரையாலும், நாம் அறிந்து கொள்வது என்னவென்றால், ஒருவன் எத்தனை நாஸ்திகனாக இருப்பினும், வாழ்நாளில் இழிசெயலையே நிரம்பச் செய்திருப்பினும், பிறருக்கு அதிகமான தீங்கை விளைவித்திருப்பினும், அவன் இறக்கும் தறுவாயில், தன்னை யறியாமலோ, அல்லது தனக்குப் பிடித்தமான ஒருவனுக்குப் பகவானின் நாமத்தை வைத்திருந்த காரணத்தால் அவன் பெயரையேனும் ஒருதரம் கூறினால் முக்தி கிட்டுவது உறுதி. ஆகையால் பகவன் நாமத்தை ஒரு தரமாகிலும் கூறுங்கள் என்று உபதேசித்துள்ளனர். உபமானமாக அநேக கதைகளையும் வரைந்துள்ளனர். அதில் ''அஜாமேளன்'' என்பவன் கதையும் ஒன்று.

அஜாமேளன் என்பவன் பெரும் நாஸ்திகன். பகவான் என்று ஒருவரும் இல்லை என்ற எண்ணமுடையவன். அவனுக்குப் பல குழந்தைகள் இருந்தனர். கடைசிப் பையனுக்கு நாராயணன் என்ற பெயரை வைத்திருந்தான். மற்றப் பையன்களைவிட நாராயணனிடம் அவனுக்கு அன்பு அதிகம். ஓர் சமயம் அஜாமேளன் பெரும் பிணியால் அவதிப்பட்டு உயிர் போகும் தறுவாயில் இருந்தான். அச் சமயம், தன் அருமை மகனைப் பிரிந்து செல்கின்றோமே என்று மனம் கலங்கினான். உடனேயே அவனைப் பார்க்க எண்ணி நாராயணா என்று கூவி அழைத்தான். இந்த சப்தத்தைக் கேட்டதும் எம்பெருமான் ஸ்ரீமன் ''நாராயணனுடைய பரிவாரங்கள்'' ஓடோடியும் வந்து இவனை சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்ல வந்தனர். அச் சமயம், இவன் அதிகமான பாபத்தையே செய்திருந்தமையால் ''யமகிங்கரர்கள்'' இவனுடைய உயிரை இழுத்துச்சென்று நரகத்தில் இடர்ப்படுத்த எண்ணி ஓடோடியும் வந்தனர். இவன் உயிரை எடுத்துச் செல்வதில் ஸ்ரீமன் நாராயணனின்'' ஆட்களுக்கும், ''யமதர்மராஜனின்'' ஆட்களுக்கும் சண்டையுண்டாயிற்று.



இந்த மனிதன் தன் ஜீவிதம் பூராவுமே பாபமான காரியங்களையே செய்து வந்திருக்கும் பொழுது, புண்ணியவான்களை அழைத்துச் செல்லும் நீங்கள் வந்து அழைக்க வந்திருப்பதின் காரணம் யாது? நீங்கள் தவறுதலாக வந்து விட்டீர்கள் போலும் என்று யமதர்மராஜரின் ஆட்கள் கூறவே—

இவன் வாழ்நாள் பூராவும் பாபத்தையே செய்திருப்பினும் உயிர் பிரியும் தறுவாயில், எங்கள் பிரபுவின் நாமத்தையே கூறினான். ஆகையால் பரமாத்மாவின் பெயரை ஒருதரம் சொன்னாலே சுவர்க்கபோகம் உண்டு என்பதனால் நாங்கள் வந்துள்ளோம் என்று ஸ்ரீமன் நாராயணனின் ஆட்கள் கூறினார்கள். உடனே யமகிங்கரர்கள் சென்று விட்டனர். அஜாமேளனுக்கு சுவர்க்க போகம் கிட்டியது. இவ்வாறு கதை சொல்லுவார்கள் சாஸ்திரிகளும், மற்றுமுள்ளோரும்.

ஆனால் நமது குரு 'சுவாமி ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி மகராஜ்'' அவர்கள் இக் கதையில் பொதிந்துள்ள உண்மையை நமக்கு எடுத்து விளம்பியுள்ளார்கள்:—

அஜாமேளனுடைய உயிர் பிரியும்போல் இருக்கும் தறுவாயில், ஸ்ரீமன் நாராயணனுடைய சிஷ்யர்களும், யமதர்மராஜனின் சிஷ்யர்களும் தன்னுடைய புண்ணிய பாபத்தைப் பற்றிக் கூறிக் கொண்டிருப்பதை அஜாமேளன் தெரிந்து கொள்கிறான் — பகவான் நாமத்தை ஒருதடவை அறியாமல் கூறியதற்கு இத்தகைய பெரும் பாக்கியம் கிடைக்கும்பொழுது, தெரிந்து, பகவானையே சதா நினைந்து, நற்கருமம் செய்து வந்தால் பரப்பிரம்மத்தோடு இரண்டறக் கலந்து பேரின்ப மடையலாம் என்பதை அறிந்து கொண்டான். உடனே முழு நாஸ்திகனாகிய அஜாமேளனுக்கு ஞானம் உண்டாயிற்று. உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த அஜாமேளன் திரும்பவும் உயிர் பெற்று எழுந்தான். பின் பெரிய ஞானியாகி, பகவானோடு இரண்டறக் கலந்தான். 'அதுபோல்' அயோக்கியன் நிரந்தர அயோக்கியன் அல்ல. விபசாரி நிரந்தர விபசாரி அல்ல, என்றாவது ஒருநாள் திடீரென்று ஞானம் பெற்று, இவர்களும் ஞானியாகி முக்தியடைவார்கள். ஆகையால், ஐயோ! நாம் இதுவரையிலும் மகா மகா பாபத்தையே செய்திருக்கும் பொழுது கடைசிக் காலத்தில் நல்லவர்களாய் விளங்கி, நன்மையே செய்து

பகவானையே நினைந்து வந்தாலும் நமக்கு நற்கதி கிடைப்பது எங்ஙனம் என்றெல்லாம் தவறுதலாக எண்ணி நல்ல புத்தி உண்டாகியும், அதை அனுபவத்தில் செய்யாமல் இருந்துவிட வேண்டாம் என்று எச்சரிக்கை செய்து இக்கதையின் உண்மைக் கருத்தையும் எடுத்து விளம்பியுள்ளார்கள்.

'இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு' [குறள்]

மயக்கம் நீங்கிக் குற்றம் அற்ற மெய்யுணர்வை உடையவர்க்கு அம் மெய்யுணர்வு அறியாமையை நீக்கி இன்ப நிலையைக் கொடுக்கும் என்று திருவள்ளுவர் மிக அழகாகக் கூறியுள்ளார்.

'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து' [குறள்]

ஐயத்திலிருந்து நீங்கி மெய்யுணர்வு பெற்றவர்க்கு அடைந்துள்ள இவ்வுலகை விட அடைய வேண்டிய மேலுலகம் அண்மையில் உள்ளதாகும் என்றும் உரைத்துள்ளார்கள்.

'ஈர்த்துளம் உள்ளது உணரின் ஒரு தலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு' [குறள்]

ஒருவனுடைய உள்ளம் உண்மைப் பொருளை ஆராய்ந்து உணர்ந்தால், அவனுக்கு மீண்டும் பிறப்பு உள்ளதென எண்ண வேண்டாம் என்று உறுதியாக எடுத்துரைத்துள்ளார்.

பொல்லாதவன் நெறி நில்லாதவன்
ஐம்புலன்கள் தமை
வெல்லாதவன் கல்வி கல்லாதவன்
மெய் அடியவர்பால்
செல்லாதவன் உண்மை சொல்லாதவன்
நின் திருவடிக் கன்பு
இல்லாதவன் மண்ணில் ஏன் பிறந்தேன்
கச்சி ஏகம்பனே. (பட்டினத்தார்)



என்று முதலில் மிகவும் மன வருத்தமுற்றவர்கள் பின் வாழ்க்கையில், ஞானம் உதித்தவுடன், தான் ஏன் பிறந்தேன் என்று உருகிக் கேட்டதற்கு மாறாகப் பரமனை அடைய எத்தனை பிறவிகள் எடுக்கவும் தயராாக நிற்கிறார்கள். ஆகையால் 'அஜாமேளனை' உதாரணமாகக் கொண்டு, முன் வாழ்க்கையில் இழி செயலைச் செய்திருப்பினும் நல்ல ஞானம் உதித்ததும் (நல்லவர் சேர்க்கை கிடைத்ததும்) நல்லவைகளை மேற்கொண்டு பரமாத்மனை அடைய முயற்சிப்போமாக. சத் குரு மகராஜ் கீ ஜய்!


## தீங்கனிச் சோலை

மகாகவி தாகூரின் (Fruit Gathering) என்ற நூலைக்
கவிஞர் பரமஹம்ஸதாசன் அவர்கள்
**தீங்கனிச் சோலை** என்ற பெயருடன்

பக்திச்சுவை நனிசொட்டும் கவிதைகளால் பாடி வெளியிட்டுள்ளார்கள். கவிதைகள் மிக இனிய எளிய நடையில் அமைந்தவை.

விலை. ரூபா. 2. 50.

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


## குயில்வத்தைச் சிவாலய உற்சவம்

ஷை உற்சவம் 3-4-63 புதன்கிழமை ஆரம்பமாகி 7-4-63 ஞாயிறு பங்குனி உத்தரத் திருவிழாவுடன் நிறைவேறும். பக்தர்கள் யாவரும் பங்குபற்றிப் பயனடையுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

ஆத்ம ஞான சபையார்

# உண்மை யறிந்திலர்

[கணேஷ்]

குழந்தை கள்இவர்! கூடிநின் றாடுகின் றார்களிங்கே;
கழிந்து சென்றிடும் காலத்தில் வாழ்வு கரைந்துவிடும்;
விளங்கு பேரருள் வித்தக; நின்னை விளங்கிவிடாக்
குழந்தை கள்இவர் வாழுகி றார்களிக் குவலயத்தில்!

காதல் நெஞ்சம் கலந்து கரைந்திடும் காதல!இப்
பூதலத் திலுள்ளோர் பலர்வாழ் வினிருட் குகையில்
ஏதுமின் றியிடர்படும் ஏழைகள்! இன்னல் பொங்கும்
போது நின்னருள் வேண்டித் துடித்திடும் பேதையர்கள்!

ஆலயத் தினருங்கத வைத்திறந் தண்ணலுந்தன்
கோல நல்லுரு வைக்கண்டு கொள்ள முனைந்திடுவார;
ஞால மீதினில் நாதியில்லாதவர் மேன்மையுற
நாலு காசுகள் நல்கிவிடார்! உன்னை நாடுகிறார்!

வாழ்வு முற்றும் வறிது புலம்பி வயிற்றிலெழும்
பாழும் இந்தப் பசியினைப் போக்கப் பரிதவித்து
வீழு கின்ற மனிதரை; வீதியில் வாழுகின்ற
ஏழை மக்களை எண்ணிடும் உள்ளங் களில்லையிங்கே!

சாத்திரங் கள் கதைத்திடு வார்களுன் சந்நிதியில்,
கோத்தி ரங்கள் குலங்களி லேசில ரைக்குறைந்த
பாத்திரங் களெனப் பகர்ந்தாலயத் தின்கதவைச்
சாத்தி நின்னடி ஏத்திடு வாருயர் சாதியிவர்!

அண்ணல் உந்தன் அருள்மழை பெய்து அவனியிலே
புன்மை யென்ற புழுதிகள் மாய்ந்து புதுப்புனல்நீர்
நண்ணி யுள்ளத் தடாகத்தில் பூத்திடும் நன்மலரில்
உண்மை நாறி யுயர்நிலை யெய்திடச் செய்திடுவாய்!

—·—

# இறைவா!

(கனியூரான்)

அலைபோல் பாயும் அனந்த ஆசையை
ஆழப்பதித்து விடு - இறைவா
மலைபோல் சாயும் பொய்மைத் தோற்றத்தை
காலில் மிதித்து விடு!

காணும் உணர்வில் வாழும் நினைவை
கிள்ளி எறிந்துவிடு - இறைவா
பேணும் உணர்வில் சூழும் அமைதியை
அள்ளி மனத்தி லிடு!

அன்னை முகந்தனில் உன்தன் திருவை
வணங்கிட அருளைக்கொடு - இறைவா
கன்னி துணையெனில் நித்தம் மனதிலே
நிறைந்த தூய்மை கொடு!

சின்னக் குழந்தையைக் கண்ணில் கண்டதும்
தழுவிட ஒளியைக்கொடு - இறைவா
வண்ண மலரினைப் போற்றிடும் மனதென
வாய்மையை நெஞ்சி லிடு:

சாயும் உலகினில் சதமெல்ல எதுவும்
சஞ்சலம் நீக்கிவிடு - இறைவா
வேகும் மனவெறி மறைந்திட வேண்டி
வேதனை தீர்த்து விடு!

காலை தோன்றும் வெய்யோன் போன்ற
வாழ்வினை ஈந்துவிடு - இறைவா
மாலை மறையும் வெய்யோன் தோற்றும்
நெஞ்சம் மாற்றி விடு!

காலம் எல்லாம் வாழ்வில் தூய்மையில்
வழுவிட வரத்தைத்தா - இறைவா
ஞாலம் என்னை வாழ்வினில் போற்றிட
ஞானம் தந்து விடு!


## குமரகுருபரன்

ஆத்மீகச் செல்வர்களின் அருளுரைகளைத் தாங்கி வரும் அரியதோர் மாத வெளியீடாகும். வருடச் சந்தா 1½ ரூபா மாத்திரமே. விபரம் வேண்டுவோர்

திரு. T. M. குமரகுருபரன்பிள்ளை, B.A., B.L நிர்வாக ஆசிரியர், ஸ்ரீ வைகுண்டம், S. I. என்ற விலாசத்திற்கு எழுதுக.

Registered at the G.P.O. as a Newspaper M. L. 59/300

## ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்!

| | | |
|---|---|---|
| தெய்வீக வாழ்க்கைச் சங்க மலர் | | 1–25 |
| வழிபாடு | | –25 |
| திருமுறைக்காட்சி | (நா. முத்தையா) | 1–50 |
| கேதார் பத்திரி யாத்திரை | ,, | –75 |
| ஸ்ரீ கதிரைமணி மாலை | (பரமஹம்ச தாசன்) | –50 |
| தேங்கனிச்சோலை | ,, | 2–50 |
| அறிவுரைக் கதைகள் | (சுவாமி சிவானந்தர்) | –65 |
| இளங்கோவின் கனவு | (செ. நடராசன்) | 2–25 |
| ஆத்ம நாதம் | (சுத்தானந்த பாரதியார்) | 3–00 |
| கீதாயோகம் | ,, | 2–50 |
| கந்தரநுபூதி – பொழிப்புரையுடன் | | –25 |
| மார்கழிப் பாடல் | | –20 |

## சந்தா நேயர்களுக்கு.

அன்புடையீர்

இன்றுவரை 15ம் ஆண்டுக்குரிய சந்தா அனுப்பியவர்களுக்கு உடனுக்குடனேயே ரசீது அனுப்பியுள்ளோம். அவர்களுக்கெல்லாம் எமது நன்றி உரித்தாகுக. இன்று வரை சந்தா அனுப்பாதோர் உடனே அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

## ஆத்மஜோதி நிலையம் - நாவலப்பிட்டி.

(சிலோன்.)

போன்;– 353.

இந்தியாவிலுள்ள அன்பர்கள் வழக்கம்போல்
R. வீரசம்பு, சம்பு இண்டஸ்ரீஸ், அரிசிப்பாளையம், சேலம்–9. என்ற விலாசத்திற்கு அனுப்பிவைத்து, அதை எமக்கும் தெரியப்படுத்த வேண்டுகின்றோம்.

## வாய்வு சூரணம்

உஷ்ணவாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு மலக்கட்டு, மலபந்தம், அஜீர்ணம், கைகால்அசதி பிடிப்பு பசியின்மை, வயிற்று வலி, பித்தமயக்கம், பித்தசூலை, புளியேப்பம், நெஞ்சுக் கருப்பு, முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரண சக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச்சிறந்த சூரணம்.

தபால் செலவு உட்பட டின் ஒன்று 4ரூபா 25சதம்

[பத்தியமில்லை]

சம்பு இண்டஸ்ரீஸ் – அரிசிப் பாளையம்சேலம் 9 (S.I.)

இலங்கையில் கிடைக்குமிடம்:

ஆத்மஜோதி நிலையம் – நாவலப்பிட்டி.

இப்பத்திரிகை ஆத்மஜோதி நிலையத்தாருக்காக ஆத்மஜோதி அச்சகத்தில் திரு. நா. விநாயகமூர்த்தியால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது 14-3-63